DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

Siva & Joy Real Estate Team
416-267-9700
Homelife/Future Reality Inc., Brokerage
Siva Shanmuganathan
Joy H. Selvanayagam

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302.5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
RE/MAX

KANAGAAMBIKAI PAWN BROKERS
2613 Eglinton Ave, East, Scarborough, ON M1K 2S2, Canada
416 269 7198

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tel: 647-344-6600

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com

25வது ஆண்டை நோக்கி
Towards 25th Year in Publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
$1.00
Tel : 416-752-1524
Fax: 416-752-6703
உதயம் 1272 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday August 21, 2020

# "கனடிய மத்திய அரசும் ஒன்றாரியோ மாகாண அரசும் கோவிட்-19 நோய் பரவலைத் தடுக்கும் முயற்சிகளில் தொடர்ந்து ஈடுபடும்."

## - ஒன்றாரியோ மாகாண முதல்வர் டக் போர்ட் அறிவிப்பு






கனடாவில் கோவிட்-19 நோய்பரவலானது எமக்கு பெரும் சவாலாக உள்ளது. இந்த வேளையில் நாம் வெவ்வேறு திசைகளில் நோய்க்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடுவது விரும்பத்தக்கதல்ல. அத்துடன் எம்மால் தனித்தனியாக நோய்க்கு எதிரான போராட்டத்தையும் திட்டங்களையும் செயற்படுத்த முடியாது. எனவே முன்னரைப் போலவே கனடிய அரசுடன் இணைந்து எமது மாகாண அரசும் இந்த நோய் பரவலுக்கு எதிராக தொடர்ந்து போராடவுள்ளன.

இவ்வாறு கூறினார் ஒன்றாரியோ மாகாண முதல்வர் டக் போர்ட் அவர்கள். நேற்று வியாழக்கிழமை காலை மாகாணத்தில் உள்ள ஒரில்லா நகரத்தில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றி முதல்வர் டக் போர்ட் அவர்கள் பல மக்கள் நலத்திட்டங்களையும் வேலை வாய்ப்புக்கள் தொடர்பான அறிவிப்புகளையும் விடுத்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் "மாகாண அரசை பொறுப்பேற்று நடத்தும் எமக்கு எந்த அரசியல் கட்சி மத்திய அரசின் அதிகாரத்தில் உள்ளது என்பதை கவனிக்கக் கூடாது. நாமும் மத்திய அரசாங்கத்தோடு இணைந்தே செல்ல வேண்டும். அப்போது மக்கள் சேவையை ஒழுங்காகச் செய்யலாம். மேலும் மிக விரைவில் ஒன்றாரியோ மாகாண காவல்துறைக்கு மேலும் 200 அதிகாரி-களை நியமிக்கவுள்ளோம்.

நாங்கள் எல்லாவற்றிலும் ஒன்றாக இணைந்து பணியாற்றத் தேவையில்லை ஆனால் பல விடயங்களிலும் பல நல்ல திட்டங்களிலும் இணைந்து பணியாற்ற வேண்டும். இந்த வகையில் கனடிய மத்திய அரசும் எமது மாகாண அரசும் இதற்கு முன்னரும் இணைந்து பணியாற்றி பல வெற்றிகளை ஈட்டியுள்ளோம்.

மேலும் கனடாவின் புதிய நிதி அமைச்சராக நியமனம் பெற்றுள்ள எனது நண்பியான கிறிஸ்ரினா அவர்களின் நியமனத்தையும் நானும் எனது அரசாங்கமும் மிகுந்த மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றோம்" என்றார்

மேலும் டக் போர்ட் அவர்கள் அங்கு உரையாற்றுகையில் "21ம் திகதி வெள்ளிக்கிழமை (இன்று) ரொரன்ரோ மாநகருக்கு அருகில் உள்ள புறோக்வில் நகரத்தில் அமைந்துள்ள ஒரு தொழிற்சாலையில் நானும் கனடாவின் பிரதமரும் ஒன்றாக இணைந்து மக்களுக்கு பயன்தரும் நல்ல திட்டங்களை அறிவிக்கவுள்ளோம். அவற்றுள், இரு அரசுகளும் தலா 23 மில்லியன் டாலர்களை முதலிட்டு என் 95 ரக முகக் கவசங்களை தயாரிக்கும் திட்டங்களுக்கு ஊக்குவிப்புக்களை வழங்கவுள்ளோம்'' என்றும் தெரிவித்தார்.

MONEY PROBLEMS?
உங்கள் அனைத்து கடன்களுக்குரிய கட்டணங்களை ஒரே சிறிய கட்டணமாக எவ்வித வட்டியுமின்றிச் செலுத்த எம்மை நாடுங்கள்.
Direct Tamil Line Visit
(416) 489-2000 GtaCredit.Com

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7 — 905 272 1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1 — 905 794 4404

ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX

உங்கள் இல்லங்கள் அல்லது பண்ணை வீடுகள் ஆகியவற்றில் அழகிய முறையில் திருத்த வேலைகளைச் செய்து கொள்ள எம்மை அழையுங்கள்
Interior: Staircase Refinishing/Installation - Flooring Refinishing /Installation
Bathroom/Kitchen/Basement Renovations Additions & Extensions
Exterior: Fence/Interlock/Deck.
ZY-Renovation Call: Ethan @ 647 995 5955

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
✓ Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

வீடு வாங்க விற்க...
மோகன் சுப்பிரமணியம்
Broker of Record / President
Direct Line: 416-321-2300 Office: 416-291-3000
6888 14th Avenue, Markham ON Independently owned and operated
PROPERTY MAX Realty Inc. Brokerage

# MORTGAGE SOLUTIONS

## $50,000 EQUITY LOAN

**GET APPROVED WITHIN 24 HOURS**

**416.298.2777**

**$375 Mo.**

www.mortgageSolutions.ca

**MONTHLY SAVING $2,478**

**SAVE UPTO 75% REFINANCE**



**KIRUBA THANABALASINGHAM**

Mortgage Agent Lic# M12002440

Ultimate Mortgage Group Lic 11995

info@mortgageSolutions.ca

Off: 416.298.2777

Dir: 416.894.9122

| | | Before | After |
|---|---|---|---|
| Mortgage Payment | $320,000 @ 2.90% | $1,498.02 | - |
| Auto Loan | $21,000 @ 7.50% | $764.25 | $0.00 |
| Line of Credit - 1 | $16,000 @ 6.50% | $566.67 | $0.00 |
| Line of Credit -2 | $12,500 @ 7.00% | $447.92 | $0.00 |
| Credit Card -1 | $ 8,800 @12.00% | $352.00 | $0.00 |
| Credt Card - 2 | $ 5,200 @ 19.00% | $238.34 | $0.00 |
| Store Card | $ 3,000 @ 24.00% | $150.00 | $0.00 |
| New Mortgage | $386,500 @ 2.39% | | $1,563.00 |
| Total Debt | | $ 386,500.00 | $ 386,500.00 |
| Total Payment | | $4,014.20 | $1,563.00 |

## MARKHAM & STEELES - BLUE BUILDING

B105 - 3341 Markham Road, Toronto, ON M1X 0A5

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள்
Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Suganthy, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

உதயன் கதிரோட்டம்

# சட்டத்தரணி மணிவண்ணனின் 'ஏமாற்றுக்காரர்கள்' என்ற வார்த்தைக்கான தேடலில் நாம் இப்போதே இறங்க வேண்டும்

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளம் சட்டத்தரணியும் யாழ்ப்பாண மாநகர சபையின் அங்கத்தவருமான சட்டத்தரணி மணிவண்ணனுக்கு அவர் சார்ந்த கட்சியின் தலைவர் மற்றும் மத்திய குழு ஆகியவற்றிலிருந்து தரப்பட்ட நெருக்குவாரங்கள் தற்போது அந்த கட்சியை 'தெருவிற்கு' கொண்டு வந்த விட்டிருக் வேண்டும்.

இந்த தர்க்கம் தொடர்பாக மணிவண்ணன் அவர்களது ஆதரவாளர்கள் தீவிரமாக செயற்பட்டு அவருக்கு ஆதரவாக இருந்தாலும் அவரது கட்சி சரியாக நடந்து கொள்ளவில்லை என்பதே யாழ்ப்பாணத்திலிருந்து எமக்கு கிடைக்கும் செய்திகளிலிருந்து அறியக் கூடியதாக இருக்கின்றது

எனவே அவரது நாவிலிருந்து வந்த 'ஏமாற்றுக்காரர்கள்' என்ற வார்த்தைக்கான தேடலில் நாம் இப்போது இருந்தே ஈடுபட வேண்டும். உடனேயே செயலில் இறங்க வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும். நடந்து முடிந்த தேர்தலில் சட்டத்தரணி மணிவண்ணன் அவர்களுக்கு கட்சிக்குள்ளேயே அவர் சார்ந்த நல்லூர் தொகுதியில் அதிக வாக்குகள் கிடைத்திருந்தன. கூட்டமைப்பிலும் பார்க்க தமிழ் காங்கிரஸ் கட்சிக்கே அதிக வாக்குகள் கிடைத்திருந்தன என்பதை தேர்தல் முடிவுகள் எமக்குக் காட்டி நின்றன.

ஆனால் தற்போது அவருக்கு எதிராக போர்க்கொடி உயர்த்தியுள்ளமைக்கு காரணம் என்ன என்பதை கண்டறிந்து அவருக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்க, யாழ்ப்பாணத்தின் கல் விச் சமூகம் முன்வர வேண்டும் என்பதையே நாம் ஒரு வேண்டுகோளாக விடுக்கின்றோம்.

நேற்யை தினம் யாழ்ப்பாண குடாநாட்டிற்குள் நடைபெற்ற ஒரு வைபவத்தில் அவர் உரையாற்றும் போது அவர் பின்வருமாறு கருத்து வெளியிட்டுள்ளார். முன்னைய தலைவர்கள் 'நேர்மையாக அரசியல் செய்தார்கள். ஆனால் இன்றுள்ள எமது தலைவர்கள் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் கிடைப்பதற்காக ஏமாற்றுவேலை செய்யக்கூடிய நிலையிலேயே உள்ளனர். மக்களின் உரிமை, தேசியம், கொள்கைக்காக போராடுபவர்கள் அதே கொள்கைக்காக போராடி எம்மை விட்டு பிரிந்தவர்களையும் நினைவு கூரவேண்டும். அவ்வாறு செய்வதே நாம் அவர்களுக்கு செய்யும் நன்றிகடனில் ஒன்றாகும். இன்றைய நினைவு நாளில் எத்தனை பேர் கலந்து கொண்டு மாமனிதரை நினைவு கூறுகின்றோம்?'' என்றார்.

அவரது கருத்துக்களை நாம் கவனத்தில் எடுக்க வேண்டும் நிச்சயமாக!

# தாய் மொழியை மறவாமல் கமலா ஹாரிஸ் உச்சரித்த 'சித்தி' என்னும் தமிழ் வார்த்தை




அமெரிக்க அதிபர் தேர்தலில் துணை அதிபர் வேட்பாளராக ஜனநாயகக் கட்சி சார்பில் போட்டியிடும் கமலா ஹாரிஸ் தமிழகத்தின் பூர்வீகத்தை என்பதை மறக்காமல், 'சித்தி' எனும் தமிழ்வார்த்தையை பிரதானப் பேச்சில் பயன்படுத்தியது அமெரிக்க மக்களிடையே வியப்பை ஏற்படுத்தியுள்ளது. தந்தை,தாய், என்று கேட்டுப்பழக்கப்பட்டிருந்த அமெரிக்க மக்களுக்கும், அங்கு வசிக்கும் இந்தியாவின் பிற மாநிலங்களைச் சேர்ந்தவர்களுக்கும் "சித்தி" எனும் வார்தத்தை புதிதாகத் தெரிந்தது. இதனால் உலக அரசியலில் "சித்தி" எனும் வார்த்தை மிகப்பெரிய தேடுபொருளாக மாறியது. அமெரிக்க மக்கள் மட்டுமின்றி, உலகம் முழுவதும் உள்ள பலரும் கமலா ஹாரிஸ் உச்சரித்த "சித்தி" எனும் வார்த்தைக்கு கூகுளில் அர்த்தம் என்ன என்பதைத் தேடத்தொடங்கியதால் அந்த வார்த்தை வைரலானது. அமெரிக்க அதிபர் தேர்தல் வரும் நவம்பர் மாதம் நடைபெற உள்ளது. இதில் குடியரசுக் கட்சி சார்பில் அதிபர் ட்ரம்ப் மீண்டும் 2-வது முறையாக போட்டியிடுகிறார்.

ஜனநாயகக் கட்சி சார்பில் ஜோ பிடனும், துணை அதிபர் வேட்பாளராக இந்தியாவை பூர்வீகமாகக் கொண்ட கமலா ஹாரிஸ் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். அமெரிக்க அதிபர் தேர்தலில் ஜனநாயக் கட்சியின் சார்பில் துணை அதிபர் வேட்பாளராக இந்தியாவைப் பூர்வீகமாகக் கொண்டவரும், ஆப்பிரிக்க அமெரிக்கருமான கமலா ஹாரிஸ் முறைப்படி புதன்கிழமை அறிவிக்கப்பட்டார். ஜனநாயகக் கட்சி சார்பில் தான் துணை அதிபர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டதையும், கமலா ஹாரிஸ் முறைப்படி ஏற்றுக்கொண்டார். இதன் மூலம் அமெரிக்கத் துணை அதிபர் பதவிக்கு போட்டியிடும் முதல் தெற்காசிய, இந்தியாவைப் பூர்வீகமாகக் கொண்ட, ஆப்பிரிக்க அமெரிக்க பெண் எனும் புதிய வரலாற்றைப் படைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் கலிபோர்னியா செனட்டர் கமலா ஹாரிஸ் பேசும் போது தனது தாய் 'சியாமளா கோபாலானை நினைவு கூர்ந்தார். கமலா ஹாரிஸின் தாய் தமிழகத்தை பூர்வீகமாகக் கொண்டவர், திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி அருகே பைங்காநாடு எனும் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. கமலா ஹாரிஸ் பேசுகையில் " என்னையும், என் சகோதரரியையூம் வலிமயையான கறுப்பினப் பெண்ணாக, துணிச்சல் மிக்க பெண்ணாக வளர்த்தது எனது தாய் 'சியாமலாதான். இந்தியக் கலாச்சாரத்தை எப்போதும் எங்களுக்கு நினைவூட்டி, அதைக் கற்றுக்கொடுத்து எனது தாய் வளர்த்தார். எனக்கு என் தாய் முதலில் குடும்பம்தான் முக்கியம் என்று சொல்லிக் கொடுத்தார். இந்த குடும்பத்தால்தான் நீ பிறந்தார், இந்த குடும்பம்தான் உன்னை தேர்ந்தெடுத்தது என்று அடிக்கடி கூறுவார். என்னுடைய குடும்பத்தில் என்னுடைய அங்கிள், ஆன்ட்டி, "சித்திக்கள்" அனைவரும் அடங்குவார்கள்'' எனத் தெரிவித்தார். இதில் கமலா ஹாரிஸ் கடைசியில் உச்சரித்த "சித்தி" எனும் வார்த்தை ஒட்டுமொத்த அமெரிக்க மக்களும் இதுவரை அறியாத வார்த்தையாக இருந்தது. சித்தி எனும் வார்த்தைக்கு என்ன அர்த்தம், ஆன்ட்டி, அங்கிள் கேள்விப்பட்டிருக்கிறோம் "சித்தி" என்றால் என்ன என கூகுளில் அர்த்தம் தேடத் தொடங்கியதால் வைரலானது. கமலா ஹாரிஸ் பேசிய "சித்தி" எனும் தமிழ்வார்த்தைக்கு அமெரிக்காவில் உள்ள முக்கியமான தமிழர்கள் பெரும் வரவேற்பு அளித்து, மகிழ்ச்சித் தெரிவித்துள்ளனர். முன்னாள் அதிபர் ஒபாமாவின் வெள்ளைமாளிகை அதிகாரி கவுதம் ராகவன் ட்விட்டரில் பதிவிட்ட கருத்தில் ''எங்கு பார்த்தாலும் அமெரிக்கர்கள் "சித்தி" வார்த்தைக்கு அர்த்தம் தேடி வருகிறார்கள். ஆனால், கமலா ஹாரிஸை எங்களுக்குத் தெரியும். அவர் மீது அன்பு செலுத்துகிறோம்'' எனத் தெரிவித்திருந்தார். தொழிலதிபரும், தொலைக்காட்சி வர்ணனையாளருமான பத்மா லட்சுமி கூறுகையில் " கமலா ஹாரிஸ் பேச்சைக் கேட்டு என் கண்களில் ஆனந்தக் கண்ணீர் வருகிறது. முழுமையாக என் மனது நிறைந்துள்ளது'' எனத் தெரிவித்தார். அமெரிக்காவில் தற்போது 2.40 லட்சத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் வாழ்ந்து வருகின்றனர் என கணக்கெடுப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் குறிப்பாக கூகுள் சிஇஓ சுந்தர் பிச்சை, நடிகை மிண்டி காலிங், பிரமிளா ஜெயபால் உள்ளிட்டவர்கள் அடங்கும்.

GHURUS TOWING
Forklift / Machinery move
Local / Long Distance Towing
Recovery Specialist
Flatbed Service
Lockout Specialist
Booster service
Flat Tire
We pay scrap up to $1000

NIRMALAN (ROGER):
(416) 990-7777
(416) 984-7777

TRUCK DRIVERS WANTED
DZ Drivers wanted.
GTA and surrounded areas.
Contact: Nathan S
(416) 520-1324

BASEMENT FOR RENT
Markham / Steeles
சந்திப்பிற்கு அருகில்
brand new, 2 bedroom basement with separate entrance
வாடகைக்கு உண்டு.
Close to all amentities.
Available Immediately
Nanthini:
(416) 857-7520

SPOKEN ENGLISH
100% உத்தரவாதம்!
ஆங்கிலம் எதுவும்
கதைக்கமுடியாதவர்கள் 2 மாதத்தில்
சரளமாக பேச முடியும்
Letter writing, Essay writing,
Citizenship exam preparation மற்றும்
IELTS preparation.
நம்பிக்கையுடன் அழையுங்கள்
துஸ்யந்தி:
(647) 606-1009

NEED HELP WITH YOUR TAXES? WE GOT YOU COVERED!!
உங்கள் வரித்தேவை, வியாபாரக் கணக்கு எதுவாயினும்,
திறமை, அனுபவம், தேர்ச்சி பெற்ற கணக்காளர்.
- Corporate Tax
- Personal Tax Planning
- Accounting
- Financial Statements
- Business Plan & Proposals
- For all your Business Needs

Call: 416 293 1616
416.438.9799
www.aricpa.ca · ari@aricpa.ca
MP Accounting & Finance Services Inc
1750 Brimley Road, Suite 213,
Toronto, ON. M1P 4X1
ARI A. ARIARAN CPA, CGA
Chartered Professional Accountant


புங்குடுதீவு மேற்கு இறுபிட்டி பெரியபுலம்
அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய
நவகுண்டபக்ஷ புனராவர்த்தன
பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம் - 2020
கணபதி துணை
புங்குடுதீவு - 5 மேற்கு இறுப்பிட்டி பெரியபுலம் அருள்மிகு
ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய
மகா கும்பாபிஷேகம் Aug 23-2020 ஞாயிறு அன்று
நடைபெற திருவருள் கூடியுள்ளது.
தற்போதய அசாதாரன சூழ்நிலை காரணமாக
தாயகத்திற்கு போக முடியாத அடியார்களுக்காக இங்கு
3411 McNicoll Ave., Scarborough ON, Canada வில்
அமைந்துள்ள செல்வ விநாயகர் ஆலயத்தில்
விஷேட அபிஷேக ஆராதனை, ஸ்தபதிகளுக்கான கௌரவிப்பு,
மற்றும் அன்னதான ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளன.
காலை 8:30 அபிஷேகத்தை தொடர்ந்து
பெரியபுலம் விநாயகர் கோவிலின் புனர் நிர்மாண,
வர்ண வேலைகளை திறம்பட அமைத்து தந்த
ஸ்தபதிகளுக்கான கௌரவிப்பு நிகழ்ச்சி நடைபெறும்.
இந்த இனிய நன் நாளில் அடியார்கள் அனைவரையும்
கலந்து சிறப்பிக்குமாறு கேட்டு கொள்கிறோம்.
இங்கனம்,
புங்குடுதீவு, பெரியபுலம் வீரகத்தி விநாயகர் அடியார்கள்.
தொடர்புகளுக்கு: (416) 995-6779

## இலங்கை செய்திகள்

# 223 இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபாநாயகர் முன்னிலையில் பதவிப்பிரமாணம்



223 நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்து கொண்டுள்ளனர். ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் சபாநாயகராக மஹிந்த யாப்பா அபேவர்தன பொறுப்பேற்றுள்ளார்.

தனிப் பெரும்பான்மையுடன் ஆட்சி அமைத்துள்ள பொதுஜன பெரமுன அரசாங்கத்தின் சார்பாக சபாநாயகர் பதவிக்கு மஹிந்த யாப்பா அபேவர்தனவின் பெயர் முன்மொழியப்பட்டிருந்தது. இதன் அடிப்படையில் ஏகமன-தாக புதிய நாடாளுமன்றத்தின் சபாநாயகராக மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவரது பெயரை தினேஷ் குணவர்தன முன்மொழிந்ததுடன், ரஞ்சித் மத்தும பண்டார வழிமொழிந்திருந்தார். இதேவேளை ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளராக ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ கடமையினை பொறுப்பேற்றார்.

# மிக விரைவில் இலங்கையில் சேலைன் தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவப்படும்



வருட இறுதிக்கு முன்னர் இலங்கைக்கு தேவையான சேலனை நாட்டிலே தயாரிப்பதற்கு தொழிற்சாலை ஒன்று ஆரம்பிக்கப்படும் என்று மருந்து தயாரிப்பு மற்று ஒழுங்குறுத்தல் இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சந்தன ஜயசுமண தெரிவித்தார்.

அநுராதபுர மாவட்டத்தில் நொச்சியாகம என்ற பிரதேச மக்களால் இராஜாங்க அமைச்சருக்கு அளிக்கப்பட்ட வரவேற்று நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார். இந்த வருடத்திற்குள் இந்த சேலன் தயாரிப்புக்களை பொது மக்களுக்கு பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்த இராஜாங்க அமைச்சர் தற்பொழுது இலங்கையில் பயன்படுத்தப்படும் மருந்து வகைகளில் 90 சதவீதமானவை வெளிநாடுகளில் இருந்து நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி தமக்கு இந்த பதவியை வழங்கிய சந்தர்ப்பத்தில் 5 வருட கால திட்டத்தை நடைமுறைப்படுத்தி வெளிநாடுகளில் இருந்து கொண்டுவரப்படும் சில மருந்து வகைகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அவர் அறிவுரை வழங்கியதாகவும் இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# கிளிநொச்சியில் தமிழரசு மீதும் எம்பி ஸ்ரீதரன் மீதும் குவியும் பல முறைப்பாடுகள்!

நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர், கிளிநொச்சி மாவட்டத்தில், தமிழரசுக் கட்சிக்கு எதிராகவும் எம்பி ஸ்ரீதரனுக்கு எதிராகவும், 20 முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

தேர்தலுக்குப் பின்னர், கிளிநொச்சியில் உள்ள தமிழரசுக் கட்சி ஆதரவாளர்களால் ஏனைய கட்சிகளின் ஆதரவாளர்களின் வீடுகளுக்குள் புகுந்து வெடி கொளுத்தியமை, அச்சுறுத்தியமை, உடமைகளுக்குச் சேதம் விளைவித்தமை, தாக்கியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பாகவே, இந்த முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் 11 முறைப்பாடுகளும், தர்மபுரம் பொலிஸ் நிலையத்தில் 2 முறைப்பாடுகளும், பளை பொலிஸ் நிலையத்தில் 4 முறைப்பாடுகளும், பூநகரி பொலிஸ் நிலையத்தில் 2 முறைப்பாடுகளும், முழங்காவில் பொலிஸ் நிலையத்தில் 1முறைப்பாடும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

# இலங்கையின் புதிய அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்ற எதிர்பார்ப்பதாக அமெரிக்கா தெரிவிப்பு

**- ஜெகதீஸ்வரன் டிசாந்த் (கனடா உதயன் செய்தியாளர்)**



புதிய அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்ற எதிர்பார்ப்பதாக இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அலெய்னா ரெப்லிட்ஸ் தெரிவித்துள்ளார்.

அலரிமாளிகையில் பிரதமர் மஹிந்த ராஜபக்சவை சந்தித்து கலந்துரையாடியபோதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

பொருளாதார, வணிக, ஆளுமை, பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி உள்ளிட்ட பல துறைகளில் இலங்கையுடன் ஒத்துழைப்பை மேம்படுத்துவதில் அமெரிக்கா ஆர்வமாக உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொரோனா பரவலைக் கட்டுப்படுத்த அரசாங்கம் முன்னெடுத்த முயற்சிகளுக்கும் அவர் இதன்போது பாராட்டுக்களை தெரிவித்துள்ளார். மேலும் இதன்போது பிர-தமர் மஹிந்த ராஜபக்ச, கொரோனா தொற்றுநோயின் தாக்கத்தால் பொருளாதார மீட்சி தற்போது முக்கியமானதாக உள்ளது என்பதை சுட்டிக்காட்டினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# வரலாற்றில் இடம் பெற்றுள்ள நந்திக்கடல் புனரமைப்பின் பணிகள் அடுத்த வாரம் ஆரம்பம்!



நந்திக்கடல் புனரமைப்பின் முதற் கட்டப் பணிகளை அடுத்த வாரம் ஆரம்பிக்க தீர்மானித்துள்ளதுடன் அதற்கான பூர்வாங்க வேலைகள் அனைத்தும் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் விசேட கரிசனையின் அடிப்படையில் கடந்த பல மாதங்களாக முன்னெடுக்கப்பட்டு வந்த நந்திக்கடல் புனரமைப்பு தொடர்பான முன்னேற்பாடுகள் நிறைவடைந்துள்ள நிலையில் இறுதிக் கட்ட கள ஆய்வுப் பணிகள் இடம்பெற்றன.

கடற்றொழில் திணைக்களம், மீன்பிடித் துறைமுகக் கூட்டுத்தாபனம், நாரா எனப்படும் தேசிய நீர்வாழ் உயிரினங்கள் ஆராய்ச்சி நிறுவனம், வன வளத் திணைக்களம் ஆகியவற்றின் அதிகாரிகளும் கடற்றொழிலாளர் சமூகப் பிரத-நிதிகளும் கலந்து கொண்ட இறுதிக் கட்ட கள ஆய்வுகளின் அடிப்படையில் வட்டுவாகல் பாலத்தை அண்மித்துள்ள நந்திக் கடல் முகத்துவாரப் பகுத-யில் குவிந்து கிடக்கின்ற கழிவுகளை உடனடியாக அகற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில், குறித்த முதற்கட்டப் பணிகள் அடுத்த வாரம் ஆரம்பிக்கப்படவுள்ளது. யுத்தம் மற்றும் தமிழ் தலைமைகளின் அக்கறையீனம் காரணமாக கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக தூர்வாரி புனரமைக்கப்படாத நிலையில் சுனாமி போன்ற இயற்கை அனர்த்தங்களினாலும் யுத்தத்தினாலும் நந்திக்கடலில் குவிந்து கிடக்கும் கழிவுப் பொருட்களும் சேற்று படுக்கைகளும் நந்திக்கடலின் இயற்கை சமநிலையில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதனால் மீன், இறால் போன்ற கடலுணவுகளின் உற்பத்தி குறைவடைந்தமையினால், குறித்த நீர்நிலையை வாழ்வாதாரமாக கொண்டு வாழ்ந்து வருகின்ற ஆயிரக்கணக்கான குடும்பங்கள் பாதிப்பினை எதிர்கொண்டன. குறித்த விடயம், கடந்த வருட இறுதியில் கடற்றொழில் மற்றும் நீரக வள மூலங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்கு பாதிக்கப்பட்ட மக்களினால் கொண்டு வரப்பட்டது.

இந்நிலையில், குறித்த விடயத்தில் தொடர்ச்சியாக கவனம் செலுத்திய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வழங்கிய அறிவுறுத்தல்களின் பலனாக நந்திக்கடல் புனரமைப்பு பணிகள் அடுத்த வாரம் ஆரம்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE

எல்லாவிதமான வலிகளுக்கும் ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை மனத்தளர்ச்சி, தலைவலி, நீரிழிவு நோய், வயிற்றுவலி, மாதவிடாய் சம்மந்தமானவையும் உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
தொடர்புகொள்ளவும்

Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9




Preparation of Income Taxes
T1 and T2 with E/File

Location :
Unit 9- 40 Winges Road
Woodbridge, ON
L4L 6B2

Pearl Fortune Canada
Head Office
101 Laird Drive, Markham,
Ontario L3S 3N6
Office Number 905-554-5606
Fax Number 905-554-3236



Yo K Gamar ( C.M.A)
Cell : 416-917-7263
Accountant since 1993


Amma Brand
இப்பொழுது கனடாவிலும் கிடைக்கின்றது!
Amma
Apple Cider
with Mother Vinegar
LOOSE WEIGHT
HELPS IN :
WEIGHT MANAGEMENT
GLOWING SKIN
GOOD FOR HEART
BLOOD PRESSURE
URIC ACID
100% Natural
NOW IN CANADA
Import and Deliver
AMMA FOOD INC.
647-832-5471
Premium Quality
Amma
Gingelly Oil
(Contains Permitted Anti-Oxidants)
சுத்தமான நல்லெண்ணெய்
NOW IN CANADA
Import and Deliver
AMMA FOOD INC. 647-832-5471
750ml
375ml
Amma Herbal
Juices
NOW IN CANADA
Jamun with Karela Juice
Aloe Vera Juice
Karela Juice
Amla Juice
Neem Leaf with Aloe Vera Juice
Body Pain Relax Juice
Aloe Noni with Aloevera Juice
100% NATURAL
Import and Deliver
AMMA FOOD INC.
647-832-5471

# 2020 களத்தில் பெரும்பான்மையை மிஞ்சிய சிறுபான்மை

- சிவா பரமேஸ்வரன்

இலங்கை நாடாளுமன்றத்துக்கு இம்முறை தெரிவான 225 உறுப்பினர்களில் 48 பேர் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களில் 28 பேர் தமிழர்கள் 20 பேர் முஸ்லிம்கள். தமிழர்களில் 25 பேர் நேரடியாகவும் ஏனைய மூன்று பேர் தேசியப் பட்டியல் மூலமும் தெரிவாகியுள்ளனர். இவர்களில் 8 பேர் ஆளும் தரப்பைச் சேர்ந்தவர்கள்.

முஸ்லிம்களைப் பொறுத்தவரை 16 பேர் நேரடியாகவும் நான்கு பேர் தேசியப் பட்டியல் வழியாகவும் நாடாளுமன்றத்தில் பிரவேசிக்கின்றனர். இவர்களில் ஐவர் ஆளும் தரப்பைச் சேர்ந்தவர்கள். பிரதான முஸ்லிம் கட்சிகளான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் (மரம்), அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் (மயில்) ஆகியவை ஐக்கிய மக்கள் சக்தி (தொலைபேசி)யில் பங்காளிகளாகப் போட்டியிட்டாலும் தேசியப் பட்டியலில் அவர்களுக்கு ஏமாற்றமே மிஞ்சியது. இதன் காரணமாகக் கடந்த நாடாளுமன்றத்துடன் ஒப்பிடும் போது முஸ்லிம்களுக்கு இரு ஆசனங்கள் குறைந்துள்ள அதேவேளைத் தமிழர் தரப்பின் 28 உறுப்பினர்களில் மாற்றமில்லை.



சிறுபான்மைக் கட்சிகளைப் பொறுத்த வரை 2015 தேர்தலுடன் ஒப்பிடும் போது தமிழ் முற்போக்குக் கூட்டணி (ஏணி) இம்முறையும் தமது ஆறு ஆசனங்களையும் தக்க வைத்துக் கொண்டுள்ளது. இந்திய வம்சாவளி மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் மற்றொரு கட்சியான இ.தொ.கா தமது இரண்டு இடங்களை மீண்டும் பெற்றுள்ளது.

தமிழ்க் கட்சிகளைப் பொறுத்த வரை ஈ.பி.டி.பி யின் ஆசனங்கள் இரண்டாக உயர்ந்துள்ள அதேவேளை தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஆசனங்கள் 11ஆக வீழ்ச்சியடைந்துள்ளது. தமிழ் காங்கிரஸ் (சைக்கிள்), தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி (மீன்), தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் (படகு) ஆகிய கட்சிகளின் பலமான போட்டியே கூட்டமைப்பின் ஆசனங்களைக் குறைத்துள்ளது. மயில் மற்றும் மரம் கட்சிகள் கடந்த முறையை விட இம்முறை தலா ஒரு இடத்தைக் குறைவாகப் பெற்றுள்ளன.

| கட்சி: | 2015: | 2020: | கட்சி: | 2015: | 2020: |
|---|---|---|---|---|---|
| வீடு | 16 | 10 | படகு | -- | 01 |
| ஏணி | 06 | 06 | சேவல் | 02 | 02 |
| வீணை | 01 | 02 | மரம் | 07 | 05 |
| சைக்கிள் | -- | 02 | மயில் | 05 | 04 |
| மீன் | -- | 01 | குதிரை | -- | 01 |

சிறுபான்மைக் கட்சிகள் இவ்வாறு ஆசனங்களைப் பெற்றுள்ள அதேவேளை தேசியக் கட்சிகளான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் ச.வியாளேந்திரன் (மட்டக்களப்பு), காதர் மஸ்தான் (வன்னி), சுரேன் ராகவன் (தேசியப் பட்டியல்) என மூவர் தெரிவாகியுள்ளனர். அக்கட்சியில் அமைச்சர் அலி சப்ரி உட்பட மூன்று முஸ்லிம்களுக்கு தேசியப் பட்டியல் இடமளிக்கப்பட்டுள்ளது.

சுதந்திரக் கட்சியின் அடையாளம் அங்கஜன்:

1989ஆம் ஆண்டுத் தேர்தலுக்குப் பிறகு அதாவது 31 வருடங்களின் பின்பு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கைச் சின்னத்தில் ஒரேயொரு உறுப்பினர் நேரடியாக தெரிவாகியுள்ளார். யாழ் மாவட்டத்தில் அங்கஜன் இராமநாதன் மூலமே அந்த ஆசனம் கிடைத்துள்ளது.



சிறுபான்மை இனத்தைச் சார்ந்த ஒருவர் பிரதான தேசியக் கட்சி ஒன்றின் அடையாளமாக நாடாளுமன்றத்தில் இருக்கிறார். தொலைபேசிக் கட்சியில் சுரேஷ் வடிவேல் (பதுளை), அப்துல் ஹாலிம் (கண்டி), முஜிபுர் ரஹ்மான் (கொழும்பு), எஸ்.எம்.மரிக்கார் (கொழும்பு) மற்றும் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் (தேசியப் பட்டியல்) என ஐவருமே நேரடி சிறுபான்மை இனப் பிரதிநிதிகள். ஏனை சிறுபான்மை இனப் பிரதிநிதிகள் பங்காளிக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் மயில் கட்சி இத்தேர்தலில் மட்டக்களப்பு, திருகோணமலை, வன்னி, அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் தொலைபேசியுடன் இணைந்து போட்டியிட்ட போதிலும் அம்பாறையில் தனித்துப் போட்டியிட்டு ஒரு ஆசனத்தைப் பெற்றுள்ளது.

அதேவேளை பிரதான முஸ்லிம் கட்சிகள் இணைந்து முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பாக புத்தளத்தில் போட்டியிட்டன. அதில் மயில் கட்சியைச் சேர்ந்த ஒருவர் தெரிவானார். தேசியக் காங்கிரஸ் முதல் முறையாக அம்பாறை மாவட்டத்தில் தனித்து குதிரைச் சின்னத்தில் போட்டியிட்டு அதன் தலைவர் ஏ.எல்.அதாவுல்லாஹ் இம்முறை தனித்துவ அடையாளத்துடன் நாடாளுமன்றம் செல்கிறார்.

ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுனவின் பிரதான முஸ்லிம் பங்காளிக் கட்சியாக தேசியக் காங்கிரஸ் இருந்தாலும், நாடாளுமன்றத் தேர்தலில் மொட்டுச் சின்னத்தில் போட்டியிட அக்கட்சிக்கு வாய்ப்பு கிடைக்காத நிலையில் குதிரையில் அவர் தனித்துப் பயணிக்க வேண்டியதாயிற்று.




புது முகங்கள்:

இம்முறை தெரிவாகியுள்ள உறுப்பினர்களில் 53 பேர் முதல் தடவையாக நாடாளுமன்றத்தில் நுழைகிறார்கள். இவர்களில் யாழ் மாவட்டத்திலிருந்து சி.வி. விக்னேஸ்வரன், வன்னியிலிருந்து கு.திலீபன், மட்டக்களப்பிலிருந்து சாணக்கிய ராகுல ராஜபுத்திரன், சிவநேசதுரை சந்திரகாந்தன் ஆகியோருடன் மலையகத்திலிருந்து ஜீவன் தொண்டமான், மருதுபாண்டி ராமேஸ்வரன், மா.உதயகுமார் ஆகியோர் நேரடித் தெரிவு புது முகங்களாகும்.

தேசியப் பட்டியல் வழியாக சுரேன் ராகவன், தவராசா கலையரசன் ஆகியோரும் தமிழர் தரப்பு புது முகங்களாக நாடாளுமன்றத்தில் பிரவேசிக்கின்றனர். வினோ நோகராதலிங்கம், கோவிந்தன் கருணாகரம், செல்வராஜா கஜேந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் குறிப்பிட்ட கால இடைவெளிக்குப் பிறகு நாடாளுமன்றத்தில் நுழைகின்றனர்.

முஸ்லிம்களைப் பொறுத்தவரை ஹாபீஸ் நசீர் (மட்டக்களப்பு) அலி சப்ரி ரஹீம் (புத்தளம்), எம்.முஷர/ப் (அம்பாறை) ஆகியோருடன் தேசியப் பட்டியலில் அமைச்சர் அலி சப்ரி, மொஹம்ட் பலீல் மர்ஜான் புது முகங்களாக நாடாளுமன்றத்துக்குச் செல்கிறார்கள்.

மூன்று முன்னாள் முதலமைச்சர்கள்:

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இதுவரை முதலமைச்சர்களாக இருந்த நால்வரில் மூவர் இம்முறை நாடாளுமன்றத்துக்கு தெரிவாகியுள்ளனர். வட மாகாணத்தின் முதலாவது முதலமைச்சரான சி.வி.விக்னேஸ்வரன் அவரது கட்சியான தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி சார்பில் நாடாளுமன்றம் செல்கிறார்.




அதே-போல் கிழக்கு மாகாணத்தின் முதலாவது முதலமைச்சரான சிவநேசதுரை சந்திரகாந்தன் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் சார்பில் தெரிவாகியுள்ளார். இதே மாகாணத்தின் மற்றொரு முன்னாள் முதலமைச்சரான ஹாபீஸ் நசீர் முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதியாக நாடாளுமன்றத்தில் நுழைகிறார். இந்த இருவரும் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து தெரிவானவர்கள்.

கிழக்கு மாகாணத்தின் மற்றுமோர் முன்னாள் முதலமைச்சரான நஜீப் ஏ மஜீத திருகோணமலை மாவட்டத்தில் குதிரைச் சின்னத்தில் போட்டியிட வேட்பு மனு தாக்கல் செய்தாலும் அது நிராகரிக்கப்பட்டது.

கட்சிகள் அதிகம் ஆனால் பலமில்லை:

இலங்கை நாடாளுமன்ற வரலாற்றில் முதல் முறையாக எண்ணிக்கையின் அடிப்படையில் பெரும்பான்மைக் கட்சிகளை விட சிறுபான்மைக் கட்சிகள் இம்முறை கூடுதலாக உள்ளன.

| பெரும்பான்மைக் கட்சிகள்: | ஆசனங்கள்: | சிறுபான்மைக் கட்சிகள்: | ஆசனங்கள்: |
|---|---|---|---|
| பொதுஜன பெரமுன | 145 | தமிழரசுக் கட்சி | 10 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 54 | ஈ.பி.டி.பி | 02 |
| தேசிய மக்கள் சக்தி | 03 | தமிழ் காங்கிரஸ் | 02 |
| சுதந்திரக் கட்சி | 01 | த. ம. வி. புலிகள் | 01 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 01 | த.மக்கள்.தே. கூட்டணி | 01 |
| அபே ஜன பலக் கட்சி | 01 | முஸ்லிம் காங்கிரஸ் | 01 |
| | | அ.இ.ம. காங்கிரஸ் | 01 |
| | | மு. தே. கூட்டமைப்பு | 01 |
| | | தேசிய காங்கிரஸ் | 01 |

மரம் மட்டக்களப்பிலும், மயில் அம்பாறையிலும் ஆகிய மாவட்டங்களில் தனித்துப் போட்டியிட்டு தலா ஒரு ஆசனத்தை வென்றனர் இதர மாவட்டங்களில் தொலைபேசியிலும் இணைந்து போட்டியிட்டு முறையே 04 மற்றும் 02 இடங்களைப் பெற்றன.

தேர்தல் முடிவுகளின்படி நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ள 15 கட்சிகளில் பெரும்பான்மைக் கட்சிகளைச் சிறுபான்மைக் கட்சிகள் மிஞ்சியுள்ளன. நாடாளுமன்றத்தில் சிறுபான்மைக் கட்சிகள் எண்ணிக்கையில் அடிப்படையில் கூடுதலாக இருந்தாலும், அவர்களால் யதார்த்த ரீதியில் மொட்டுக் கட்சியை எதிர்த்து நின்று தமது மக்களுக்குத் தேவையானவற்றை எந்த அளவுக்குப் பெற்றுக் கொடுக்கும் முடியும் என்பதில் கேள்விகள் உள்ளன.

# ஸ்டெர்லைட் போராட்டம் வெற்றியாயினும் துப்பாக்கிச் சூட்டுக்கு அரசு பதில் சொல்ல வேண்டுமென்கிறார் நடிகர் கமல்ஹாசன்



ஸ்டெர்லைட் தீர்ப்பை வரவேற்றுள்ள மக்கள் நீதிமய்யம் தலைவர் கமல் போராட்டம் இத்துடன் முடியவில்லை துப்பாக்கிச் சூடு நடத்தியதற்கு அரசு பதில் சொல்லியே ஆகவேண்டும் என தெரிவித்துள்ளார். இதுகுறித்து மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன் வெளியிட்ட அறிக்கை:

“மக்களின் வலிமையான குரலுக்கு முன்னால், வல்லரசுகளும் தலைவணங்கித்தான் தீர வேண்டுமென நீதிமன்றம் மீண்டும் ஒருமுறை தனது சிறப்புமிகு தீர்ப்பால் அனைவருக்கும் அறிவுறுத்தியிருக்கிறது. ஸ்டெர்லைட் போராட்டக்களத்தில் திரண்ட பொதுமக்களுக்கும், அரசின் அடக்குமுறையில் உயிரிழந்த தன் குடும்பத்து உறுப்பினர்களுக்கும், மரியாதை செலுத்த வேண்டிய நேரமிது. போராட்டக்களத்தில் நிற்க எனக்கு வாய்ப்பளித்த மக்களுக்கு எனது நன்றிகள். இந்த தீர்ப்பு கொண்டாடக்கூடிய ஒன்று என்றாலும், இன்னும் அந்தப் போர் முடிந்து விடவில்லை என்பதை நாம் மறந்து விடக்கூடாது. துப்பாக்கிச் சூடு நடத்திய அரசு, தன் பயங்கரவாத செயலுக்கு பதில் சொல்லியே ஆக வேண்டும். இன்று கிடைத்த நீதியை தக்க வைக்க நாம் சோர்வின்றி தொடர்ந்து போராட வேண்டும். மக்களுக்கான நீதி இன்று உறுதியாகி இருக்கின்றது. ஸ்டெர்லைட், மக்களின் நில, நீர் வளத்தையும், கனிம வளத்தையும் அபகரிக்கும் செயலுக்கு மக்கள் நீதி மய்யம் தனது வலுவான எதிர்ப்பினை தொடர்ந்து வலியுறுத்திக்கொண்டே இருக்கும். களத்தில் நானும் மக்கள் நீதி மய்யம் கட்சியும் தொடர்ந்து இருப்போம்”. இவ்வாறு கமல்ஹாசன் தெரிவித்துள்ளார்.

# முன்னாள் சி.ஐ.டி நிசாந்த சில்வாவை கைது செய்ய கம்பஹா நீதிமன்றம் உத்தரவு!



சுவிற்சர்லாந்தில் அரசியல் தஞ்சம் புகுந்துள்ள, சி.ஐ.டி.யின் முன்னாள் பொலிஸ் பரிசோதகர் நிஷாந்த சில்வாவை கைது செய்ய கம்பஹா நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது

பம்பலபிட்டி கோடீஸ்வர வர்த்தகர் மொஹம்மட் சியாம் படுகொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள, முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் வாஸ் குணவர்தன உள்ளிட்ட 8 பேருக்கு எதிரான விசாரணைகளில், சந்தேக நபர்களைக் கைதுசெய்ய புதிதாக சாட்சியங்களை உருவாக்கியதாக, கொழும்பு குற்றத் தடுப்பு முன்வைத்த கோரிக்கையை ஏற்று, கம்பஹா நீதிவான் மஞ்சுள கருணாரத்ன இந்த உத்தரவை நேற்று பிறப்பித்தார்.

# சென்னையில் இருந்து திரும்பிய இலங்கையர்கள் 16 பேருக்கு கொரோனா!

சென்னையில் இருந்து கொழும்புக்கு விமானம் மூலம் சென்ற மேலும் 16 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதையடுத்து, நாட்டில் கொரோனா தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 2,918 ஆக அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# "பெயருக்கு" ஜனாதிபதியாக இருந்த மைத்திரிபால சிறிசேனாவிற்கு புதிய பதவியாம்



முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு எதிர்வரும் அரசியலமைப்பின் ஊடாக பதவி ஒன்று வழங்குவதற்கு இணக்கம் ஏற்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

கட்சி தலைமையகத்தில் நேற்று வியாழக்கிழமை மாலை இடம்பெற்ற மத்திய செயற்குழு கூட்டத்தை அடுத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். குறித்த அரசியலமைப்பு தொடர்பில் ஆலோசனை வழங்குவதற்காக குழுவொன்றை நியமிக்க இதன்போது தீர்மானிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார். குறித்த குழுவின் தலைவராக அமைச்சர் நிமல் சிறிபால த சில்வா நியமிக்கப்பட்டுள்ளார்.

# இன்று யாழ்ப்பாணத்தில் தனது முடிவை ஊடகவியலாளர்களிடம் அறிவிக்கிறார் மணிவண்ணன்



தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் பதவியில் இருந்து நீக்கப்பட்ட, சட்டத்தரணி வீ.மணிவண்ணன், இன்று தமது நிலைப்பாட்டை ஊடகவியலாளர்களிடம் அறிவிக்கவுள்ளார்

பொதுத் தேர்தலுக்குப் பின்னர் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்குள் ஏற்பட்ட முரண்பாடுகளை அடுத்து, தேசிய அமைப்பாளர் மற்றும் ஊடகப் பேச்சாளர் பதவிகளில் இருந்து சட்டத்தரணி வீ.மணிவண்ணனை, கட்சியின் மத்திய குழு நீக்கியிருந்தது.

அவரது நீக்கத்துக்கான காரணங்களைக் குறிப்பிட்டு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தலைமையினால் கடிதம் ஒன்றும் வீ.மணிவண்ணனுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. குறித்த கடிதத்துக்கு பதிலளிக்கும் வகையிலான கடிதம் ஒன்றை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைமைக்கு வீ. மணிவண்ணன் நேற்று அனுப்பி வைத்துள்ளார்.

# இன்று வெள்ளிக்கிழமை மீண்டும் கூடவுள்ள இலங்கைப் பாராளுமன்றம்



இன்று 21ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு பாராளுமன்றம் மீண்டும் ஒன்றுகூடவுள்ளது. இதன்போது ஜனாதிபதியினால் நேற்று (20) பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட அரசாங்கத்தின் கொள்கை பிரகடனம் தொடர்பில் விவாதம் இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன், எதிர்வரும் செப்டெம்பர் 01 ஆம் திகதி முதல் அடுத்த வருடத்துக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலம் நிறைவேற்றப்படும்வரையான காலப் பகுதிக்காக அரசாங்கத்தினால் முன்வைக்கப்படும் இடைக்கால கணக்கு வாக்கெடுப்புப் பற்றி நிலையியற்கட்டளை இலக்கம் 27ற்கு அமைய ஒழுங்குப் புத்தகத்தின் ஊடாக பாராளுமன்ற உறுப்பினர்களுக்குத் தெரியப்படுத்தவும் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. அதேநேரம், எதிர்வரும் 27 மற்றும் 28 ஆம் திகதிகளில் முற்பகல் 9.30 மணி முதல் பிற்பகல் 6.30 மணிவரை பாராளுமன்ற அமர்வுகளை நடத்துவதற்கும், அத்தினங்களில் மதிய போசன இடைவேளையின்றி அமர்வுகளை முன்னெடுத்துச் செல்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நிலையியற் கட்டளை 27 (2) இன் கீழ் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இன்று பாராளுமன்றத்தில் வேலையற்ற பட்டதாரிகள் தொடர்பில் விசேட கருத்தை முன்வைக்கவுள்ளார்.



# இலங்கை நாடாளுமன்றமும் பெண்கள் பிரதிநிதித்துவமும்

- சிவா பரமேஸ்வரன்

இலங்கை மக்கள் தொகையில் 52 வீதம் பெண்களாகவுள்ள போதிலும் நாடாளுமன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவம் அவர்களின் விகிதாசாரத்துடன் ஒப்பிடும் போதும் மலைக்கும் மடுவுக்குமான இடைவெளியாகவே உள்ளது.



பிரதான அரசியல் கட்சிகள் பெண்கள் பிரதிநிதித்துவத்தின் அவசியம் பற்றிப் பேசி வந்தாலும் அது உதட்டளவில் மட்டுமே உள்ளது. பெண்களைப் புறக்கணிக்கும் இந்தப் போக்கு வேட்பாளர்கள் தெரிவிலிருந்து தேசியப் பட்டியல் நியமனம் வரை தொடருகிறது.

உலகில் முதலாவது பெண் பிரதமரை உருவாக்கிய நாடு எனும் பெருமை இலங்கைக்கு உண்டு. அப்படியான நாட்டில் சனத்தொகையில் ஒப்பீட்டளவில் ஆண்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தாலும் அரசியலில் யதார்த்த ரீதியில் ஆணாதிக்க சமூகமாகவே இருந்து வருகிறது.

இலங்கையின் சுதந்திரத்துக்கு முன்னர் இருந்த சட்டசபையில் அடினே மெலமுறி (1931-35) முதலாவது பெண்ணாக ருவான்வெல தொகுதியிலிருந்து தெரிவாகியிருந்தார். 1936 தேர்தலில் கொழும்பு வடக்குத் தொகுதியிலிருந்து தெரிவான நேசம் சரவணமுத்து சட்டசபைக்குத் தெரிவான முதலாவது தமிழ்ப் பெண் பிரதிநிதி என்ற பெருமைக்குரியவர்.

சுதந்திரத்துக்குப் பின்னர் முதலாவது நாடாளுமன்றத்தில் மூன்று பெண்கள் தொகுதிவாரித் தேர்தலில் தெரிவாகினர். அதில் இருவர் இடைத் தேர்தல்களில் வெற்றி பெற்றவர்கள். சுதந்திரத்துக்கு பின்னர் தொகுதிவாரி முதல் விகிதாசாரம் வரை அனைத்து தேர்தல்களிலும் பெண்கள் தெரிவானாலும் அவர்களின் விகிதாசாரத்துக்கேற்ப எண்ணிக்கை என்பது நினைத்துக் கூடப் பார்க்க முடியாதுள்ளது.

இதுவரை இலங்கை நாடாளுமன்றத்துக்குத் தெரிவான பெண்களைப் பொறுத்தவரை அநேகமானோர் குடும்ப அரசியல் பின்புலத்தில் வாரிசாக வந்தவர்கள். குறிப்பாக உலகின் முதலாவது பெண் பிரதமரான சிறிமாவோ பண்டாரநாயக்க அவரது கணவர் சாலமன் டயஸ் பண்டாரநாயக்க சுட்டுக் கொல்லப்பட்ட பிறகு அரசியலில் பிரவேசித்து பிரதமராகத் தெரிவானார். அவர் 10/10/2000 அன்று காலமாகும் வரை நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருந்தார்.

நாடாளுமன்றத்தில் தமிழ்-முஸ்லிம் பெண்கள்:

சுதந்திரத்துக்கு பிறகு நாடாளுமன்றத்துக்குத் தெரிவான முதல் தமிழ் பெண் உறுப்பினர் என்ற அடையாளத்தைப் பெற்றவர் ரங்கநாயகி பத்மநாதன். 1977 தேர்தலில் பொத்துவில் தொகுதியில் த.வி.கூ வேட்பாளராகப் போட்டியிட்டுத் தெரிவான எம். கனகரட்ணம் பின்னர் ஐ.தே.கவுக்கு தாவினார்.



1979ஆம் ஆண்டு அவர் காலமானதையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கு அவரது சகோதரியான ரங்கநாயகி பத்மநாதனை ஐ.தே.க நியமித்தது. பதினோரு ஆண்டுகள் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த அவர் 1989 தேர்தலில் தோல்வியடைந்தார்.

முஸ்லிம்களைப் பொறுத்தவரை 2000ஆம் ஆண்டுத் தேர்தலில் அஞ்சான் உம்மா ஜே.வி.பின் தேசியப் பட்டியல் மூலம் நியமிக்கப்பட்டார். அதே தேர்தலில் அம்பாறை மாவட்டத்திலிருந்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் பேரியல் அஷ்ரப் தெரிவானார். தேர்தல் காலத்தில் அவரது கணவரின் அகால மரணத்தால் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு அவர் வேட்பாளராகக் களமிறக்கப்பட்டார்.

மக்களால் நேரடியாகத் தெரிவு செய்யப்பட்ட முதல் முஸ்லிம் பெண் நாடாளுமன்ற உறுப்பினர் எனும் பெருமையைப் பேரியல் அஷ்ரப் பெற்றிருந்தாலும் இஸ்லாத்தின்படி (இத்தா) நான்கு மாதங்களும் 10 நாட்களுக்குப் பிற ஆண்களைச் சந்திப்பதற்குத் தடை இருப்பதால் அந்தக் காலம் முடிந்த பிறகே பதவியேற்றார்.

பேரியல் அஷ்ரப் 2000, 2004 தேர்தலில் தெரிவாகி 2010ல் நாடாளுமன்ற அரசியலிருந்து ஒதுங்கினார். எனினும் பதிவியேற்பு திகதியின் அடிப்படையில் நாடாளுமன்றத்தில் பிரவேசித்த முதல் பெண் முஸ்லிம் உறுப்பினர் அஞ்சான் உம்மா.

அஞ்சான் உம்மா ஜே.வி.பி அங்கம் வகித்த ஐ.ம.சு.முன்னணி சார்பில் கம்பஹா மாவட்டத்தில் 2001, 2004 தேர்தல்களில் போட்டியிட்டு நாடாளுமன்றத்துக்கு தெரிவானாலும் 2010 தேர்தலில் தோல்வியடைந்தார்.

கடந்த நாடாளுமன்றத்தில் ஒரு தேசியப் பட்டியல் ஆசனம் உட்பட 13 ஆக இருந்த பெண்கள் பிரதிநிதித்துவம் இம்முறை நான்கு தேசியப் பட்டியல் ஆசனங்கள் உட்பட 12 ஆகக் குறைந்துள்ளது. 2015 தேர்தலுடன் ஒப்பிடும் போதும் இம்முறை மக்களால் நேரடியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள பெண்களின் எண்ணிக்கை மூன்றில் ஒரு பங்கு வீழ்ச்சியடைந்துள்ளது.

2015 தேர்தலில் ஐ.தே.க சார்பில் தெரிவான விஜயகலா மகேஸ்வரன், த.தே.கூ தேசியப் பட்டியல் சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா தவிர ஏனையவர்கள் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள்.

2020 தேர்தலும் பெண்களும்:

இந்தத் தேர்தலில் போட்டியிட்டவர்களில் 8% பெண்கள். பிரதானக் கட்சிகள் சார்பில் 76 பேர் களமிறக்கப்பட்டிருந்தாலும் 8 பேர் மட்டுமே இம்முறை தெரிவானார்கள். அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் பெண்களுக்கு இடமளித்திருந்தாலும் எவரும் தெரிவாகவில்லை. 2015 தேர்தலில் 13 பேர் தெரிவாகி 5.77% ஆக இருந்த பெண்கள் விகிதாசாரம் இம்முறை 12 ஆகக் குறைந்து 4.4% ஆக வீழ்ச்சியடைந்தது.
(படம்: சுமேதா ஜயசிங்க)

விகிதாசார முறை அறிமுகமான 1989 தேர்தல் முதல் மொனராகலை மாவட்டத்திலிருந்து தொடர்ந்து 8 முறை தெரிவான முன்னாள் அமைச்சர் சுமேதா ஜயசிங்க இம்முறை தோல்வியடைந்தார். இம்முறை நாடாளுமன்றம் செல்லும் பெண்களில் தாமரை மொட்டு-08, தொலைபேசி-03, ஜே.வி.பி-01 என உள்ளனர்.

தமிழ்ப் பெண் பிரதிநிதித்துவம்:

| பெயர்: | கட்சி: | மாவட்டம்: | காலம்: |
|---|---|---|---|
| ரங்கநாயகி பத்மநாதன் | ஐ.தே.க | அம்பாறை | 1978-1989 |
| ராஜமனோகரி புலேந்திரன் | ஐ.தே.க | வன்னி | 1980-1994 |
| பத்மினி சிதம்பரநாதன் | த.தே.கூ | யாழ்ப்பாணம் | 2004-2010 |
| தங்கேஸ்வரி கதிர்காமர் | த.தே.கூ | மட்டக்களப்பு | 2004-2010 |
| விஜயகலா மகேஸ்வரன் | ஐ.தே.க | யாழ்ப்பாணம் | 2010-2020 |
| சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா | த.தே.கூ | தே.பட்டியல் | 2015-2020 |

ரங்கநாயகி பத்மநாதன் முதலாவது பெண் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தாலும் மக்களால் நேரடியாகத் தெரிவான முதல் பெண் உறுப்பினர் எனும் பெருமை ராஜமனோகரி புலேந்திரனையேச் சாரும்.

சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா 2015 தேர்தலில் வன்னி மாவட்டத்தில் போட்டியிட்டுத் தோல்விகண்ட நிலையில் பெண் பிரதிநிதித்துவம் என்ற ரீதியில் தேசியப் பட்டியல் வழங்கப்பட்டது. அவர் இம்முறையும் போட்டியிட்டுத் தோல்வியடைந்தார்.

ஐ.தே.க அமைப்பாளராக இருந்த தனது கணவரின் படுகொலையை அடுத்து அரசியலுக்கு வந்தவர் ராஜமனோகரி புலேந்திரன். அவ்வாறே விஜயகலா மகேஸ்வரனும் அரசியலுக்கு வரும் சூழல் ஏற்பட்டது. 2010, 2015 தேர்தலில் யாழ் மாவட்டத்தில் போட்டியிட்டுத் தெரிவான இவர் இம்முறை படுதோல்வியைச் சந்தித்தார்.

கடந்த 16 ஆண்டுகளுக்குப் பிறகு இம்முறை நாடாளுமன்றத்தில் தமிழ்ப் பெண்கள் பிரதிநிதித்துவத்தை தக்கவைக்க முடியாமல் போனது துரதி'டமே. வடக்கு-கிழக்கு மாகாணங்களிலிருந்து தான் இம்முறையும் ஓரிரு தமிழ்ப் பெண்கள் தெரிவு செய்யப்படுவார்கள் என்று எதிர்ப்பார்க்கப்பட்டது. ஆனால் அங்குள்ள பெண் வாக்காளர்கள் தமது விருப்பு வாக்குகளைச் சரியான முறையில் பயன்படுத்தத் தவறியதன் காரணமாகவே இந்நிலை ஏற்பட்டது என்று கூறப்படுகிறது. ஹஅவளுக்கு ஒரு வாக்குஹ (அதாவது கட்சிக்கு புள்ளடியிட்டாலும் அந்தக் கட்சியின் பெண் வேட்பாளருக்கும் ஒரு புள்ளடியிடவும்) விருப்பு வாக்குக்கான பெண் செயற்பாட்டாளர்கள் முன்னெடுத்த பிரச்சாரமும் எடுபடவில்லை.



இம்முறை அனைவரும் சிங்களவர்:

இம்முறை தெரிவாகியுள்ள 12 பெண்களில் ஆளும் கட்சியின் பவித்திரா வன்னியராய்ச்சி கால் நூற்றாண்டைக் கடந்து நாடாளுமன்றத்தில் மிகவும் மூத்த உறுப்பினராக உள்ளார். தந்தையின் வாரிசாக அரசியலுக்கு வந்த இவர் 1994ல் முதல் முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

2015 தேர்தலில் ஐ.ம.சு.முன்னணியில் தெரிவாகி இரட்டைக் குடியுரிமைப் பிரச்சினைக் காரணமாக கீதா குமாரசிங்க பதவியிழந்தார். அவர் சுவிஸ் பிரஜையாகவும் இருந்ததால் அரசியல் யாப்பின் 19ஆவது திருத்தத்தின்படி அவரது தெரிவை நீதிமன்றம் செல்லுபடியற்றதாக்கியது. எனினும் அவர் இம்முறை இலங்கைப் பிரஜையாக காலி மாவட்டத்தில் தாமரை மொட்டுச் சின்னத்தில் போட்டியிட்டு வென்றார்.




இலங்கையிலுள்ள தேர்தல் மாவட்டங்களின் எண்ணிக்கை 22. இருப்பினும் 5 மாவட்டங்களிலிருந்து மட்டுமே இம்முறைப் பெண்கள் தெரிவாகியுள்ளனர்.

இதில் இரத்தினபுரி மாவட்டத்திலிருந்து மாத்திரம் பவித்திரா வன்னியாராய்ச்சி மற்றும் முதித்த த சில்வா தாமரை மொட்டுச் சார்பிலும் தலதா அத்துகொரள தொலைபேசி சார்பிலும் தெரிவானார்கள். கம்பஹா மாவட்டத்திலிருந்து தாமரை மொட்டு சார்பில் சுதர்ஷினி பெர்ணான்டோபுள்ளே, கோகில தர்ஷன குணவர்த்தன ஆகியோரும் தெரிவாகியுள்ளனர்.

மாத்தளை மாவட்டத்தில் தொலைபேசி ஊடாக ரோஹினி கவிரட்ணவும் காலி மாவட்டத்தில் கீதா குமாரசிங்க தாமரை மொட்டிலும் அதே சின்னத்தில் கேகாலையில் ராஜிக விக்ரமசிங்கவும் தெரிவாகியுள்ளனர்.

கடந்த நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்த அனைத்துப் பெண்களும் நடைபெற்றத் தேர்தலில் போட்டியிட்ட போதிலும் ஐந்து பேர் மட்டுமே மீண்டும் தெரிவாகியுள்ளனர். தேசியப் பட்டியலில் தெரிவான நான்கு பெண்கள் உட்பட இம்முறை 7 பேர் புதுமுகங்கள்.

2015ல் தெரிவான ஹிருணிகா பிரேமச்சந்திர (கொழும்பு) சந்திராணி பண்டார (அனுராதபுரம்) அனோமா கமகே (அம்பாறை) சிறியானி விக்ரம (அம்பாறை) ஆகியோரும் 2020 தேர்தலில் தோல்வியடைந்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்.


ராஜபக்ச அரசாங்கம் நாட்டில் தேர்தல் சீர்திருத்தம் உட்பட பல மாறுதல்களை கொண்டுவர உத்தேசித்துள்ளதாக அறிவித்துள்ளது. அப்படிச் செய்யும் போது உள்ளூராட்சி சபைகள் போல நாடாளுமன்றத்திலும் குறைந்தது 25 வீதமாவது பெண்கள் இருக்கும் வகையில் சட்டம் கொண்டுவந்தால் மட்டுமே நாடாளுமன்றத்தில் பெண்களுக்கான பிரதிநிதித்துவம் உறுதிப்படுத்தப்படும். இல்லையேல் ஹவேதாளம் முருங்கை மரம் ஏறிய கதைஹ தான்.






*யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்...*

# மாற்று அணியின் முன்னாலுள்ள பணி



இம்முறை தமிழ் மக்கள் கூட்டமைப்பின் ஏகபோகத்தை நிராகரித்து இரண்டு மாற்று அணிகளுக்கு மூன்று இடங்களை வழங்கியிருக்கிறார்கள்.

கடந்த பதினோருஆண்டுகளாக தமிழ் அரசியலில் கூட்டமைப்பு ஏக பிரதிநிதிகளாக வீற்றிருந்தது. கூட்டமைப்பிலிருந்து விலகிச் சென்றவர்கள் வெல்ல முடியாது என்றும் மார் தட்டியது. ஒரு தும்புத்தடியை மக்கள் முன்வைத்து அதற்கு வாக்களியுங்கள் என்று கேட்டாலும் தமிழ் மக்கள் வாக்களிப்பார்கள் என்று இறுமாப்போடு இருந்தது.

ஆனால் அந்த இறுமாப்பு இந்த முறை சோதனைக்கு உள்ளாகியிருக்கிறது. மாற்று அணியை சேர்ந்த மூவர் இம்முறை நாடாளுமன்றத்துக்கு செல்கின்றார்கள். மாற்று அணியை பொறுத்தவரை இது வெற்றியின் தொடக்கம். தமிழ் அரசியலை பொறுத்தவரை இது மாற்றத்தின் தொடக்கமாக அமையுமா?

முதலில் மாற்று எதுவென்பதை அதன் சரியான பொருளில் விளங்கிக் கொள்ள வேண்டும். கூட்டமைப்புக்கு எதிராக நிற்பது மாற்று அல்ல. கூட்டமைப்பு செய்யும் எல்லாவற்றையும் விமர்சிப்பதும் மாற்று அல்ல. நாடாளுமன்றத்தில் கூட்டமைப்பு ஏற்றுக்கொள்ளும் எல்லாவற்றையும் எதிர்ப்பதும் மாற்று அல்ல.அல்லது நாடாளுமன்றத்தில் கூட்டமைப்பின் நண்பர்களுக்கு எதிராக வாக்களிப்பது மாற்று அல்ல. மாற்று இவை எல்லாவற்றையும் விட ஆழமானது. அது ஒரு புதிய பண்பாடு. அது ஒரு புதிய அரசியல் செயல் வழி.

2009-க்கு பின்னரான தமிழ் அரசியலை அதன் அடுத்தடுத்த கட்டங்களுக்கு முன்னெடுப்பதற்கு தேவையான ஓர் அரசியல் செயல் வழி. தமிழ் மக்களிடம் இப்பொழுது ஆயுதப்போராட்டம் இல்லை. மக்கள் இயக்கங்களும் இல்லை. இருப்பதெல்லாம் தேர்தல் அரசியல்தான். எனவே மாற்றத்தை அங்கிருந்தே தொடங்கலாம். எப்படித் தொடங்கலாம்?

மாற்றத்தை விரும்பும் தரப்புக்கள் தேர்தல் மூலம் மக்கள் ஆணையைப் பெறவேண்டும். அதை அதன் சரியான பொருளில் சொன்னால் மக்கள் அதிகாரத்தைப் பெற வேண்டும். அந்த மக்கள் அதிகாரத்தை வைத்துக் கொண்டு அடுத்த கட்டத்துக்குப் போக வேண்டும்.

இந்த இடத்தில் ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்ட வேண்டும். தமிழ் மக்கள் தமது பிரதிநிதிகளுக்கு கொடுக்கும் அதிகாரம் எனப்படுவது நாடாளுமன்றத்தில் பெருமளவுக்குச் செல்லுபடியாகாது. அது பெரும்பான்மையினரின் நாடாளுமன்றம். அங்கே தமிழ் மக்களுக்கு மிக அரிதாகவே பேரம் பேசும் சக்தி கிடைக்கும்.

ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தில் அப்படி ஒரு பேரபலம் கிடைத்தது. ஆனால் இப்போதுள்ள ராஜபக்சவின் அரசாங்கத்தில் தமிழ் மக்களுக்கு பேரபலம் இருக்கப் போவதில்லை. அதனால் நாடாளுமன்றத்தின் தீர்மானங்களை மாற்றும் சக்தி தமிழ் மக்களுக்கு இருக்கப் போவதில்லை. எனவே இந்த நாடாளுமன்றத்தையும் அதன் இயல்பையும் தமிழ் பிரதிநிதிகளுக்கு அதில் இருக்கக்கூடிய வரையறைகளை-யும் முதலில் சரியாக விளங்கிக் கொள்ள வேண்டும். அப்படி என்றால் நாடாளுமன்றத்துக்கு போய் ஒரு பயனும் இல்லையா?

அப்படியும் சொல்ல முடியாது. பயன் உண்டு. நாடாளுமன்றத்தை ஒரு மேடையா-கப் பயன்படுத்தலாம். தமிழ் பிரதிநிதிகள் தமது கருத்தை உலகத்துக்கு எடுத்துரைப்பதற்கு நாடாளுமன்றம் ஒரு மிகச் சிறந்த மேடை. எனவே குறைந்தபட்சம் நாடாளுமன்றத்தை ஒரு பிரச்சார மேடையாக ஆவது பயன்படுத்தலாம். ஆனால் அதற்குமேல் ஆசைப்படும் அளவுக்கு இப்போது இருக்கும் நாடாளுமன்றத்தில் தமிழ் மக்களுக்கு பேரம் இல்லை.

எனவே நாடாளுமன்றத்தில் ஒரு கட்டத்துக்கு மேல் எதையும் செய்ய முடியாது. ஆயின் அடுத்த கட்டம் என்ன? அடுத்த கட்டம் எது என்பதனை மாற்று அணியின் இறுதி இலக்கு எது என்பதே தீர்மானிக்கின்றது. மாற்று அணியை சேர்ந்த இரண்டு கட்சிகளும் சமஸ்டி தீர்வை முன்வைக்கின்றன. அப்படி என்றால் அந்த சமஸ்டியை எப்படி அடைவது? சமஸ்ரிக்கு அரசாங்கம் ஒத்துக் கொள்ளாது.

மாகாணசபைக்கு எதிரான ஒருவரான ஓய்வு பெற்ற ரியல் அட்மிரல் சரத் வீரசே-கர அதற்குப் பொறுப்பான ராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்டிருக்கிறார். பதவியேற்றதும் அவர் பின்வருமாறு தெரிவித்திருக்கிறார். "நான் 13 ஆவது திருத்தத்தை மிகக் கடுமையாக எதிர்த்தவன்.மாகாண சபைகள் என்னிடம் ஒப்படைக்கப்பட்டதை விதியின் நகைச்சுவையாகவே கருதுகின்றேன்.

எந்த சந்தர்ப்பத்திலும் காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்கப்போவதில்லை என்பதை தெளிவாக கூறிக்கொள்கிறேன்" ஆயின் இனப்பிரச்சினைக்கான தீர்வாக ஒரு சமஸ்டிக் கட்டமைப்பை ராஜபக்சக்கள் தரப்போவதில்லை. அப்படி என்றால் அதை எப்படிப் பெறுவது?

இக்கேள்விக்கு விடை காண்பது என்றால் இலங்கைதீவில் இதுவரையிலும் முன்னெடுக்கப்பட்ட சமாதான முயற்சிகளை பற்றி ஒரு பிரேத பரிசோதனை வேண்டும். கடந்த தசாப்தங்களில் மேற்கொள்ளப்பட்ட பெரும்பாலான சமாதான முயற்சிகள் தோல்வியில் முடிந்தன.

இரண்டு சமாதான முயற்சிகள்தான் ஒப்பீட்டளவில் வெற்றி பெற்றன. அவற்றின் விளைவுகளும் நீண்டகாலத்துக்கு நீடித்திருந்தன. இவ்வாறு இரண்டு சமாதான முயற்சிகளை இனங்காணலாம்.

முதலாவது இந்திய-இலங்கை உடன்படிக்கை. இரண்டாவது நோர்வேயின் அனுசரணையுடனான ரணில்-பிரபாகரன் உடன்படிக்கை. இதில் முதலாவது இந்திய இலங்கை உடன்படிக்கை.

அதன் பிரகாரம் தான் மாகாண சபைகள் உருவாக்கப்பட்டன.இன்று வரையி-லும் நடைமுறையில் உள்ளன. மற்றது நோர்வேயின் அனுசரணையுடனான சமாதானம். இது கிட்டத்தட்ட ஐந்து ஆண்டுகள் நீடித்தது. தமிழ் மக்களை ஒரு தரப்பாக ஏற்றுக் கொண்டு எழுதப்பட்ட ஓர் உடன்படிக்கை இது. இந்த இரண்டு உடன்படிக்கைகளுக்கும் ஒரு பொது இயல்பு உண்டு. அது

என்னவெனில் இவை இரண்டும் வெளித் தரப்புகளின் அழுத்தங்களால் அல்லது கண்காணிப்புகளால் நிறைவேற்றப்பட்டவைதான். இந்திய-இலங்கை உடன்படிக்கையை அமுல்படுத்துவதற்கு இந்திய அமைதி காக்கும் படை நாட்டிற்குள் இறக்கப்பட்டது. ரணில்-பிரபாகரன் உடன்படிக்கையை கண்காணிப்பதற்கு இணை அனுசரணை நாடுகளின் தலைமையின் கீழ் ஸ்கண்டிநேவிய போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுஇறக்கப்பட்டது. அதாவது இந்த இரண்டு உடன்படிக்கைகளையும் கண்காணிக்கவும் நடைமுறைப்படுத்தவும் வெளி அழுத்தம் அல்லது அனுசரணை அல்லது படைப்பிரசன்னம் அல்லது யுத்த நிறுத்த கண்காணிப்பு குழுக்களின் பிரசன்னம் போன்றன தேவைப்பட்டன. எனவே தொகுத்துப் பார்த்தால் வெளி அழுத்தங்களின் பின்னணியில்தான் இவ்விரு உடன்படிக்கைகளும் நிறைவேற்றப்பட்டன. அல்லது குறிப்பிடத்தக்க காலம் உயிர் வாழ்ந்தன.

இவ்விரண்டையும் தவிர மற்றொரு ஆகப்பிந்திய தீர்வு முயற்சியையும் இங்கு சுட்டிக்காட்டலாம். ஐநாவின் அனுசரணையோடு முன்னெடுக்கப்பட்ட ஒரு தீர்வு முயற்சி அது.2015 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஐநா மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட முப்பதின் கீழ் ஒன்று தீர்மானமே அது.

இத்தீர்மானத்தின் மூலம் இலங்கைதீவில் நிலைமாறுகால நீதியை ஸ்தாபிப்பதற்கு அப்போது இருந்த ரணில்-மைத்திரி அரசாங்கம் ஏற்றுக்கொண்டது. நிலைமாறுகால நீதியின் மீள நிகழாமை என்ற பிரிவின் கீழ் இலங்கைதீவின் யாப்பை மாற்றவும் ஒப்புக்கொண்டது.அதன்படி நாடாளுமன்றம் சாசனப் பேரவையை மாற்றப்பட்டு யாப்புருவாக்க முயற்சிகள் தொடக்கப்பட்டன.

இந்த முயற்சிகளை ஐநா தொடர்ச்சியாகக் கண்காணித்தது. இலங்கை தீவை தன்னுடைய செல்வாக்கு வளையத்துக்குள் ஐநா தொடர்ச்சியாகப் பேணியது. ஐநாவின் சிறப்பு தூதுவர்களும் ஏனைய தூதுவர்களும் இலங்கைக்குள் அடிக்கடி வந்து போயினர். தவிர ஐநாவை பின்னிருந்து இயக்கிய மேற்கு நாடுக-ளின் தலைவர்களும் தூதுவர்களும் இராஜதந்திரிகளும் நிலைமாறுகால நீதி-யை முன்னெடுக்குமாறு அரசாங்கத்தின் மீது நேரடியாகவும் மறைமுகமாகவும் அழுத்தங்களை பிரயோகித்தார்கள்.

ஆனால் அம்முயற்சிகள் அனைத்தையும் மைத்திரிபால சிறிசேன 2018 ஒக்டோபர் மாதம் தோற்கடித்து விட்டார்.

இலங்கைத்தீவின் நாடாளுமன்றம் நிலைமாறுகால நீதியை ஐநா பரிந்துரைக்கும் அதன் முழுமையான வடிவத்தில் ஏற்றுக்கொள்ளாது என்பதே கடந்த ஐந்து ஆண்டுகால அனுபவம் ஆகும். அதிலும் குறிப்பாக ரணில் மைத்திரி அரசாங்கத்தின் மூன்றிலிரண்டு பெரும்பான்மை எனப்படுவது ஒப்பீட்டளவில் பல்லினத் தன்மை மிக்க மகத்தான ஒரு மக்கள் ஆணை. அந்த மூன்றில் இரண்டு பெரும்பான்மையை வைத்துக்கொண்டு ஐநா இலங்கைத்தீவில் நிலைமாறுகால நீதியை முன்னெடுக்க முயற்சித்தது. ஆனால் அது தோற்கடிக்கப்பட்டது.

இப்பொழுது இருப்பதோ தனிச் சிங்கள வாக்குகளால் கட்டி எழுப்பப்பட்டது என்று காட்டப்படும் ஒரு மூன்றில் இரண்டு பெரும்பான்மை. இந்த மூன்றில் இரண்டு பெரும்பான்மையை வைத்துக்கொண்டு நிலைமாறுகால நீதி முன்னெடுக்க முடியுமா?

அது கடினம் என்ற காரணத்தால் தான் சம்பந்தர் வெளி அழுத்தத்தை வேண்டி நிற்கிறார். இந்தியா எம் பின்னால் நிற்கிறது என்று அவர் கூறுவது அதனால்தான். அதாவது நிலைமாறுகால நீதியை அதன் சிதைந்த வடிவத்திலாவது நடைமுறைப்படுத்துவதற்கு வெளிநாடுகளின் அழுத்தம் தேவை என்று பொருள்.

மேற்கண்ட மூன்று அனுபவங்களையும் தொகுத்து சிந்தித்தால் ஒன்று தெளிவாக தெரியவரும். வெளி அழுத்தம் அல்லது மூன்றாவது தரப்பின் தலையீடு என்ற ஒரு விவகாரம் இல்லையென்றால் இலங்கைத்தீவில் இரண்டு இனங்களுக்கும் இடையே இணக்கம் ஏற்பட வாய்ப்பில்லை.

அப்படி என்றால் அந்த அழுத்தத்தை எப்படி உருவாக்குவது? அதுவும் அரசற்ற தரப்பாகிய தமிழ் மக்கள் அதை எப்படி உருவாக்குவது? நாடாளுமன்றத்தில் நெருப்பைக் கக்கும் உரைகளின் மூலம் அது உருவாகாது. நாட்டுக்கு வரும் வெளிநாட்டு பிரதிநிதிகளை சந்தித்து விட்டுக்கொடுப்பற்ற நிலைப்பாடுகளை வெளிப்படுத்துவதன் மூலம் அது உருவாகாது. அப்படி என்றால் இலங்கை அரசாங்கத்தின் மீது வெளித் தரப்புக்கள் நிர்ப்பந்தங்களைப் பிரிப்பதற்கு என்ன செய்ய வேண்டும்?

இதுதான் கேள்வி. இந்தக் கேள்விக்கு பொருத்தமான தீர்க்கதரிசனம் மிக்க விடையை கண்டுபிடிப்பதில் தான் மாற்று அணி என்பது ஒரு புதிய அரசியல் செயல் வழியைத் திறக்க முடியும். கூட்டமைப்பு செய்தவை எல்லாம் பிழை என்று கூறும் மாற்று அணி தமிழ் அரசியலை பயன் பொருத்தமான விதத்தில் அடுத்த கட்டத்துக்கு நகர்த்துவதாக இருந்தால் முதலில் மேற்கண்ட கேள்விக்கு விடை கண்டுபிடிக்க வேண்டும். இதை இன்னும் கூர்மையாக கூறின் நாடாளுமன்றத்துக்கு வெளியே தான் மாற்று அணி அதிகம் வேலை செய்ய வேண்டியிருக்கும். நாடாளுமன்றத்துக்கு வெளியே என்பது நடைமுறையில் மூன்று பரப்புகளைக் குறிக்கும். முதலாவது தாயகம். இங்கு வெகுசன மைய போராட்டங்கள். இரண்டாவது தமிழகம். அங்கே இந்திய நடுவண் அரசின் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்கும் போராட்டங்கள்நகர்வுகள். மூன்றாவது புலம் பெயர்ந்த தமிழ்ச் சமூகம். அங்கே ஐநாவை நோக்கியும் தலைநகரங்களை நோக்கியும் முன்னெடுக்கப்பட வேண்டிய ஒரு லோபி. இப்படியாக புது டில்லியை நோக்கியும் ஏனைய தலைநகரங்களை நோக்கியும் ஒரு லொபியை முன்னெடுக்க வேண்டும். அதேசமயம் நடந்தது இனப்படுகொலையே என்பதை நிரூபிக்கத் தேவையான சான்றாதாரங்களை உலகம் ஏற்றுக்கொள்ளும் ஒரு முறைமைக் கூடாக முன்வைக்க வேண்டும்.

இதற்கு வேண்டிய ஒரு வழி வரைபடத்தை இரண்டு மாற்றுக் கட்சிகளும் இணைந்து உருவாக்க வேண்டும். இது மிகவும் முக்கியமான ஒரு முன்நிபந்தனை. இணைந்து உருவாக்க வேண்டும் என்பது.

இதுவிடயத்தில் தனித் தனியாக நின்று தனி ஓட்டம் ஓடினால் கூட்டமைப்பு கடந்த 11 ஆண்டுகளாக தமிழ் மக்களை எங்கே கொண்டு வந்து நிறுத்தியதோ அதே இடத்துக்கு தான் மாற்றும் அடுத்த ஐந்து ஆண்டுகளின் பின் தமிழ் மக்களை கொண்டு வந்து நிறுத்தும். எனவே ஐக்கியம் முக்கியம். இணைந்த செயற்பாடு முக்கியம். ஆகக்குறைந்தது ஏற்றுக்கொள்ளத்தக்க பொதுவிடங்களிலாவது ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். அதற்கு வேண்டிய விடயப் பரப்புக்களை அடையாளம் காண்பதற்குரிய உரையாடல்களை இப்பொழுதே ஆரம்பிக்க வேண்டும்.

ஏற்கனவே தமிழ் மக்கள் பேரவையின் முக்கியஸ்தர் சிலர் இதுபோன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக அறிய முடிகிறது. அதைத் தமிழ் மக்கள் பேரவை-யும் உட்பட ஏனைய சிவில் அமைப்புக்கள் ஒரு நிறுவனமயப்பட்ட செயற்பாடாக மாற்றி மாற்று அணியின்மீது தார்மீக அழுத்தத்தைப் பிரயோகிக்க வேண்டும். அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கும் தோற்காமல் இருப்பதென்றால் அதை இப்போதே உடனடியாகத் தொடங்க வேண்டும்.

# STEELES PODIATRY CLINIC

## கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**

- Extended Health Care
- Private - Work Insurance
- MVA - WSIB
- ODSP - Social Service

**LIST OF SERVICES**

- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle - Knee - Back Braces

**ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE**



உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7

**416.298.FOOT (3668)**

# SKN FINANCIAL

www.sknfinancial.com



அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனம்

**கனடாவில் மிகக் குறைந்த வட்டி வீதத்தில் தங்க அடைவு செய்யக் கூடிய ஒரே அடைவு மாடம்**

- $ அவசரப் பணத் தேவையா? புதிய வியாபாரம் தொடங்கப் பணம் தேவையா?
- $ புதிய மனை வாங்குவதில் பணச்சிக்கலா?
- $ உங்கள் மாதாந்த வட்டியை வங்கியில் கட்டும் வசதியும் உண்டு
- $ உங்கள் அடைவுகளை இலகுவாக மீட்பதற்குப் பலவிதமான திட்டங்கள் உள்ளன
- $ வட்டித் தொகைக்கு வரிவிலக்கு பற்றுச் சீட்டு வழங்கபடும்

முழுமையாக காப்புறுதி செய்யப்பட்டது

உங்கள் நகைகளுக்குப் பாதுகாப்பு!..

குறைந்த வட்டி!..[2% முதல்]

நிறைந்த பெறுமதி!...

www.sknfinancial.com

**SCARBOROUGH**
801 Markham Road
(Painted Post Plaza)
Markham & Ellesmere
647-729-5238


**BRAMPTON**
85 Kennedy Road South, Unit 33
( Next to TIM HORTONS )
Kennedy & Steeles
905-499-0800


PRECONSTRUCTION CONDOS & TOWNHOUSES!
Twelve Oaks Towns
GreenCity Development Group Inc.
Ivylea Towns
Marlin Spring Development and Greybrook Realty Partners
King East Estates
Plazacorp Urban Residential Communities
High Point Urban Towns
Laurier Homes
Horizons Modern Towns
Chestnut Hill Developments
Station 3 Condos
Brookfield Residential
The BoatWorks Towns
Landing Condos Whitby Harbour
JAC Condos
Graywood Developments Ltd. and Phantom Developments
181 East Condos
Stafford Homes Ltd. and Greybrook Realty Partners
Daniels Keelesdale Condos and Towns
The Daniels Corporation
Empire Quay House Condos
Empire Communities
199 Church Condos
CentreCourt Developments Inc. and Parallax Development Corp.
Church St & Dundas St E, Toronto
$537,990 - $1,018,990 | 335 sq ft - 860 sq ft
VIP Sale NOW on
Axess Condos
Universal City Condos 4
Chestnut Hill Developments
Coming Fall 2020
Bartley Towns
Artsy Condos
The Daniels Corporation
Field House Towns
The Daniels Corporation
28 Eastern Condos
Wenderly Park Towns
Maxx Urban Towns 2
Bala Logendralingam
REALTOR®
EXECUTIVE Award
100% Award
RE/MAX COMMUNITY
Realty Inc., Brokerage
Office: 416-287-2222
647-447-1562
info@balalogen.com
Suite 203 - 1265 Morningside Ave.
Toronto, ON M1B 3V9


MONEY PROBLEMS?™
ஓர் சிறிய தொகையை மாதாந்தம் செலுத்துவதன் மூலம் உங்கள் கடனில் இருந்து விடுதலை பெறலாம்
உங்களைக் கேளுங்கள்?
• நீங்கள் எப்பொழுதும் உங்கள் வங்கி தருகின்ற OVER DRAFT ஐ உபயோகிக்கின்றீர்களா?
• கடன் கொடுத்தவர்களால் உங்கள் வீட்டிற்கு அல்லது வேலைத்தளத்திற்கு தொலைபேசி அச்சுறுத்தல் அல்லது தொந்தரவு செய்வதுண்டா?
• வாடகை, மோட்கேஜ், வாகனங்களுக்கான கட்டணங்களை செலுத்துவதில் சிரமப்படுகின்றீர்களா?
• நிதிப்பிரச்சனை உங்கள் திருமணத்தையோ அல்லது உடல் நலத்தையோ பாதிக்கின்றதா?
• CREDIT RATING உங்கள் எதிர்காலத்தைப் பாதிக்கின்றதா?
• உங்கள் கார், வீடு, RRSP, பங்குகள் மற்றும் ஏனைய சொத்துக்களை இழந்துவிடுவோம் என அஞ்சுகின்றீர்களா?
• உங்களுக்கு எதிராக நீதிமன்ற கட்டளைகள் உண்டா?
• உங்களுக்கு CRA உடன் தனிப்பட்ட வருமானவரிகள் அல்லது வேறு வரிகளினால் பிரச்சனைகள் உண்டா?
gta™ credit
மேற்குறிப்பிட்ட கேள்விகளுக்கான உங்கள் பதில் "ஆம்" என்று இருந்தால் நீங்கள் உடனடியாக எங்களோடு தொடர்பு கொண்டு தனிப்பட்ட பிரத்தியேக சந்திப்பொன்றை மேற்கொள்ள வேண்டும். உங்கள் சந்திப்பு எமது அலுவலகத்தில் உள்ள அரச அங்கீகாரம் பெற்ற ஆலோசகர் ஒருவரோடு இடம்பெறும்
Scarborough / Downtown Toronto: 416-489-2000
Mississauga / Brampton: 416-650-5400
Scarborough
201-4433 Sheppard Ave. E
Scarborough, ON, M1S 1V3
Toronto/Downtown
800-120 Eglinton Ave. E
Toronto, ON, M4P 1E2
North York
306-1280 Finch Ave. W
North York, ON, M3J 3K6
Mississauga
110-93 Dundas Street E.
Mississauga, ON, L5A 1W7
Brampton
201-7990 Kennedy Rd. South,
Brampton, Ontario, L6W 0B3
Mark Shamly
Tamil Consultant
Proudly Served over 15,000 clients since 2004
Visit : GtaCredit.Com
Ajay Oberoi
Experienced Credit Counsellor


TNEXT's
Tamil Fest
தமிழர் தெரு விழா
6th TAMIL FEST
LIVE VIRTUAL CONCERT
August 29th & 30th, 2020
VIEW LIVESTREAM ON:
MEDIA SPONSOR
ATN
Singer Mano
Haricharan
Jessica Judes
Sruthi Balamurali
Super Singer Sinmaye
TITLE SPONSOR
POWERED BY
HOSTED BY
SUPPORTED BY
Canadian Tamil Congress
Congrès Tamoul Canadien
Canada
TORONTO
SILVER SPONSORS
EMPREUS HOMES
Formula Honda
HOMELIFE
BANQUET
Life100
VIBRANT HOSPITALITY GROUP
416.240.0078
tamilfest@canadiantamilcongress.ca
tamilfest.ca
#tamilfestTO
@tamilfest.ca

# மேலதிகமான வணிகங்களும் சேவைகளும் மீண்டும் திறக்கப்படுவதனால், நாம் அனைவரும் ஒருவரையொருவர் பாதுகாப்பதற்கான எமது முயற்சிகளைக் கண்டிப்பாகத் தொடர வேண்டும்.





**உடல்ரீதியான தனிநபர் இடைவெளி தூரத்தைத் தொடர்ந்து கடைப்பிடிக்கவும்,** ஒன்றுகூடல்களின் போதும் இரண்டு மீட்டர் தூரத் தனிநபர் இடைவெளியைப் பேணவும்.



உடல்ரீதியான தூரத்தைக் கடைப்பிடிப்பது ஒரு சவாலாக இருக்கும்போதும், கோரப்படும் இடங்களிலும் **முகக்கவசம் ஒன்றினை அணிந்து கொள்ளவும்.**



**அடிக்கடி கைகளைக் கழுவுதலைத்** தொடர்ந்து பின்பற்றவும்.



உங்களுக்கு COVID-19 இருப்பதாக அல்லது அந்த வைரஸ் தாக்கத்துக்கு நீங்கள் முகம் கொடுத்திருப்பதாக எண்ணினால், **அதற்குரிய சோதனைக்கு உட்படவும்.**

**வீட்டினுள்ளேயும் அல்லது வெளியிடங்களிலும் பாதுகாப்பாக இருந்து கொள்ளவும். உங்களையும் மற்றவர்களையும் பாதுகாத்துக் கொள்ளவும்.**

மேலும் அறிய **ontario.ca/coronavirus** ஐப் பார்வையிடவும்

இதற்குரிய கட்டணம் ஒன்ராறியோ அரசாங்கத்தால் செலுத்தப்பட்டுள்ளது.

Ontario

# GTA SQUARE MALL

# Gift Plus

வழங்கும்

Sale!!!

## கோடைகால மலிவு விற்பனை



Collectable Unique Statue & Picture Frame $1



24 Gold Plated God Statue
Regular: $25.00
Buy one get one free



3 Set of Laughing Buddha
Regular: $20
Sale Price: $5



Cup and Soucer Set (12pcs)
Regular: $25.00
Buy one get one free



Green Buddha
Regular: $60
Sale Price: $40
Buy one get one free



New Design Bubble Gun Light Up & Music
Regular: $15.00
Buy one get one free



Wheel Shoes
Regular: $39.99
Sale Price: $20.00
Buy one get one free



Sewing Thread
Regular: $3.99
Sale Price: $1

மிக குறைந்த விலைகளில்....



Baba pendant & Baba key chain
$1



Dragon Statue
Regular: $200.00
Sale Price: $20.00



Music Light Up Pads
Regular: $39.99
Sale Price: $20.00
Buy one get one free



Artificial Flowers
$20.00
Buy one get one free

## Fashion Mask (Kids & Adults)

Disposable Mask, Cloth Mask, Washable Mask

| | |
|---|---|
| 50pcs High Quality Disposable Mask | Regular: $24<br>Sale Price: $7.99<br>(two box per person) |
| Cloth Mask Reusable Fashion Mask | $2 |
| Kids Mask Reusable | $2 |
| Face Shield | $5 |



Different kinds of Mask available
Huge Quantity also......

தாமதம் வேண்டாம்! விரைந்து வருக!!

❀ Some items are limited.

# GIFT PLUS

T.P.: 416 804 8999

In GTA Square Mall
5215 Finch Ave., East - Unit 102, 104, 159
Scarborough, On. M1S 0C2

# மரண அறிவித்தல்

தோற்றம்: 07 - 09 - 1948



மறைவு: 17 - 08 - 2020

# திரு. சேனாதிராஜா இராஜலிங்கம்

(மல்லிகா ஸ்ரோஸ் பொரளை) (புங்குடுதீவு 12ம் வட்டாரம்)

புங்குடுதீவு 12ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கனடா Scarboroughஐ வதிவிடமாகவும் கொண்ட திரு. சேனாதிராஜா இராஜலிங்கம் அவர்கள் 17-08-2020 திங்கட்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் கணபதிப்பிள்ளை உடையார் (நெடுந்தீவு) அவர்களின் மூத்த பூட்டனும்,

காலஞ்சென்றவர்களான சேனாதிராஜா (அதிபர்) - தெய்வநாயகி தம்பதிகளின் சிரேஸ்ட புதல்வரும்,
காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் - நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும்,

சிவமணி அவர்களின் ஆருயிர்க் கணவரும்,

துஷ்யந்தி, நிஷாந்தி, விஜியந்தி, குணானந்தி ஆகியோரின் பாசமிகு தந்தையும், முருகதாஸ், சுஜீவன் ஆகியோரின் அன்பு மாமனாரும்,

ஞானலிங்கம் (இலங்கை), ஞானாம்பிகை (மல்லிகா), சுந்தரலிங்கம் (Customs), Dr. செல்வலிங்கம், சுலோசனாம்பிகை (இலங்கை), கருணாம்பிகை, சிவயோகலிங்கம், யமுனாம்பிகை (இங்கிலாந்து), சந்திரலிங்கம் (President Sena Group) ஆகியோரின் அன்புச் சகோதரரும்,

ஜெயலக்ஷ்மி, சுப்பிரமணியம், சசிகலா, அருணா, காலஞ்சென்ற தனபாலன், சிவகுமார், அம்பிகாவதி, காலஞ்சென்ற கணேசலிங்கம், திருநிறைச்செல்வி, சிவநேசன் - வான்மதி (ஜேர்மனி), சிவயோகலிங்கம் (செட்டி) - மதிவதனி, சிவநிதி ஆகியோரின் அன்பு மைத்துனரும்,

மிதுனன், விதுனன் ஆகியோரின் அன்புத் தாத்தாவும் ஆவார்.

*அன்னாரின் பூதவுடல் 23-08-2020 ஞாயிற்றுக்கிழமை மாலை 5:00 மணி தொடக்கம் 9:00 மணிவரையும், மறுநாள் 24-08-2020 திங்கட்கழமை காலை 10:00 மணி தொடக்கம் பி.ப. 12:00 மணிவரை* 8911 Woodbine Avenue, Markham *இல் அமைந்துள்ள* Chapel Ridge Funeral Home & Cremation Centre *இல் பார்வைக்காக வைக்கப்பட்டு, பி.ப. 12:30 மணி தொடக்கம் ஈமைக்கிரியைகள் நடைபெற்று, பின்னர்* 12492 Woodbine Avenue, Gormley *இல் அமைந்துள்ள* Highland Hills Crematorium *இல் தகனம் செய்யப்படும்.*

**இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

**தகவல்: குடும்பத்தினர்**

**தொடர்புகளுக்கு:**

சிவமணி - மனைவி (Mobile): (416) 261-1696
முருகதாஸ் - மருமகன் (Mobile): (416) 457-7461
சந்திரலிங்கம் - சகோதரர் (Mobile): (416) 220-9179
சுதாகரன் - பெறாமகன் (Mobile): (647) 720-9161
துஷ்யந்தி - மகள் (Mobile): (416) 297-8568
சுந்தரலிங்கம் - சகோதரர் (Mobile): 4377709533
ஞானலிங்கம் - சகோதரர் (Mobile): 9477305704
சிவயோகலிங்கம் (செட்டி) - மைத்துனர் (Mobile): (416) 569-1229

*- மொன்றியால் வீணைமைந்தன் எழுதுகின்றார்*

# #9 சிவாஜியும் தமிழ்ச் சினிமாவும்

"நடிகர் திலகம்" அவர்கள் நடித்த படங்களில் "ஓரங்க நாடகம்" அவ்வப்போது இடம்பெறும் என்று எழுதியிருந்தேன் அல்லவா. 1956ல் இயக்குனர் பீம்சிங் அவர்கள் இயக்கத்தில் "ராஜா ராணி" திரைப்படம் வெளியாயிற்று. இப்படத்திற்கு உரையாடல் எழுதியவர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் ஆகும். "ராஜபார்ட்" வேடங்களை ஏற்று பல நாடகங்கள் வழியாக புகழ்பெற்றிருந்த சிவாஜி அவர்கள் மீண்டும் ராஜா வேடத்தில் நடித்த (திரையில் நாடகம்) எல்லோராலும் பாராட்டப் பெற்ற பாத்திரம் சேரன் செங்குட்டுவன் ஆகும். இந்த வேடம் ஏற்று நடிக்கும் முன் கலைஞர் மு.கவிற்கும் சிவாஜி அவர்களுக்கும் இடையே ஒரு சிறிய கோபத்துடன் கூடிய சம்பவமொன்று நடந்தது. கோபத்தால் ஏற்பட்ட விளைவு, இன்றும் யாவரும் படித்தும் பேசியும் இன்பமுறும் தமிழ் இன்பமாகும்.




அது என்ன? சிவாஜியே கூறுகிறார் "ராஜாராணி" படத்தில் நான் சேரன் செங்குட்டுவன் ஆக நடிக்கும்போது ஒரு பெரிய வசனம் பேசுவேன். அதுவும் கலைஞர் எழுதியதுதான். அதில் ஒரு சின்ன கதை அடங்கியிருக்கிறது. அதற்கு முன்னால் நானும் கலைஞர் அவர்களும் ஒரு நாடகத்தில் நடிக்கும் போது நான் செங்குட்டுவன் ஆக நடித்தேன். அப்போது புறநானூற்றுச் செய்யுள் ஒன்றை தழுவி "குடிசைதான் ஒரு புறத்தில் கூரிய வாள் வரிசைதான் அமைந்திருக்கும், வையத்தை பிடிப்பதற்கும், வரும்பகை முடிப்பதற்கும்," என்று நீண்ட உரையாடல் ஒன்று வரும்.

அதைப் பேசி நடித்து இருக்கிறேன். கலைஞர் அவர்கள் "அம்மையப்பன்" என்று ஒரு படம் எடுத்தார்கள். அப்படத்தில் லட்சிய நடிகர் எஸ்.எஸ் ராஜேந்திரன் அவர்களுக்காக மேற்சொன்ன வசனத்தை மு.க எழுதிக் கொடுத்து விட்டார்கள். "ராஜாராணி" படத்தில் எனக்கும், சேரன் செங்குட்டுவன் வேடம் வந்தது. ராஜேந்திரன் பேசிய அதே வசனத்தை எனக்கும் தந்தார்கள். நான் பேசமாட்டேன், என கோபத்துடன் கூறிவிட்டேன்.

ஒரே வசனத்தை இரண்டு படங்களில் இரண்டு வெவ்வேறு கலைஞர்கள் பேசுவது எனக்கு சரியாகப்படவில்லை. கலைஞர் எனக்கு நல்ல நண்பர், அவர் மிகவும் புத்திசாலி. முதலில் எழுதியதை விட சிறப்பான உரையாடலாக மிகப்பெரிய வித்தியாசமான ஒன்றை எனக்காக எழுதிக் கொடுத்தார். இதுவும் புறநானூற்றுச் செய்யுளைத் தழுவியது தான்! பதினாறு பக்கத்திற்கு மேல் எழுதப்பட்ட வசனத்தை உடனே மனனம் செய்து ஒரே ஷாட்டில் பேசி முடித்தேன். அப்போது கேமராவில் 800, 900 அடி ஓடியிருக்கும். நான் பேசியது 9 நிமிடம் இருக்கும். ஒரே ஷாட், கேமரா அந்தப் பக்கம் இந்தப் பக்கமும் ஓடிக்கொண்டிருந்தது. அப்போது என்னுடன் இணையாக ராஜசுலோச்சனா நடித்தார்கள். அவரும் நானும் அந்தப் பக்கமும், இந்தப் பக்கமும் நடந்து நடந்து பேசிக்கொண்டிருந்தோம். க்ளோசப்பில் வருவோம், லாங் ஷாட்டில் போவோம் வருவோம், நான் தொடர்ந்து மொத்த வசனங்களையும் நிறுத்தாமல் பேசினேன். இப்போது கூட படத்தைப் பார்த்தீர்களென்றால் ஷாட் மறையவில்லை என்று தெரியும் இது மிகப்பெரிய சாதனை.



பின்னாளில் அந்த வசனத்தைப் பேசித்தான் பலர் நடிகர்களாக வந்தார்கள். அந்த காலத்தில் ஒருவன் நடிகனாக வேண்டுமெனில் அவனிடம் என்ன வசனம் பேசுவாய்? என்று கேட்பார்கள் எடுத்தவுடன் "பராசக்தி" அல்லது "சேரன் செங்குட்டுவன்" "சாம்ராட் அசோகன்" "வீரபாண்டிய கட்டபொம்மன்" வசனங்கள் பேசி நடித்துக் காட்டுவார்கள்.

இதோ கலைஞர் எழுதிய காட்சிக்கு மூலமாக அமைந்த புறநானூற்றுச் செய்யுள்: இச்செய்யுளைத் தேடிப் படிக்க, மூலமாக விளங்கியவர் ஐயா சிவாஜி அவர்களே! தமிழ் அறிய வைத்த ஆசான் அல்லவா!

*"கெடுக சிந்தை கடிதிவள் துணிவே*
*முதின் மகளிர் ஆதல் தகுமே*
*மேனாள் உற்ற செருவிற்கு இவள் தன்ஐ*
*யானை யெறிந்து களத்தொழிந் தனனே*
*நெறிநல் உற்ற செருவிற்கு இவள் கொழுநன்*
*பெருநிரை விலக்கி ஆண்டு பட்டனனே*
*இன்றும் செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி*
*வேல்கைக் கொடுத்தும் வெளிதுவிரித்து டீஇப்*
*பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவி*
*ஒருமகன் அல்லது இல்லோள்*
*செருமுகம் நோக்கிச் செல்கென விடுமே"*

*புறநானூறு பாடல் 279 - பாடியவர் ஒக்கூர் மாசாத்தியார்.*

திரைப்படங்கள் வாயிலாக தமிழ் அறிந்து சுவைக்க வைத்த "முத்தமிழ் காவலர்" கலைஞர் மு. க வையும் உயிர் கொடுத்து பேசி நடித்தும், எங்களை பேசவைத்தவருமாகிய சங்கத்தமிழ் ஆசான் "நடிகர் திலகம்" ஆகிய இருவரையும் போற்றுவோம், துதி செய்வோம்.

இதோ மேற்சொன்ன சங்க பாடலுக்கு கலைஞர் அவர்கள் நண்பர் சிவாஜிக்காக ராஜா ராணியில் இடம்பெற்ற உரையாடல் கவிதை நடையில் கற்கண்டு சுவையும் - கனல் வீச்சும் கைகுலுக்கும் காட்சி இது.

(சேரனின் ஊஞ்சல் மண்டபம்)
செங்குட்டுவனும் அரசி வேண்மாளும்.

வேண்மாள்: சுவையான கதை ஒன்று சொல்லுங்கள் அத்தான்!

**(தொடர்ச்சி 19ம் பக்கம்)**




**SCARBOROUGH ASTROLOGER & PSYCHIC**

***OM SHAKTI ASTROLOGER & PSYCHIC***

**Master: KALI**

**9 TIMES MORE POWERFUL THAN OTHER ASTROLOGERS**

***REMOVES BLACK MAGIC, JADOO, VODOO, OBEYA, BUTTU, JINN & GIVES N100% PROTECTION***



**VEDIC SOLUTIONS AVAILABLE FOR:**

* Health * Education * Family * Job
* Marriage * Divorce * Love * Childless
* Business * Promotion * Husband-Wife Couples
* Lucky Numbers * Court Etc

**REMOVES BLACK MAGIC & EVIL SPIRITS & GIVES 100% PROTECTION**

**No Person in the World is Without Problems. Meet the Pandit once and see your Future Changing for GOLDEN & BRIGHT FUTURE**

**100% Guarantee**

He can perform Devi upasana Lakshmi Pooja Shanthi Pooja (Prayers) and all so protection from enemies and jealousy

**PRIVATE & CONFIDENTIAL**

கேரளாவிலிருந்து வருகை தந்துள்ள பிரபல ஜோதிட வல்லுனர் பண்டித் **Pandit: Gabbar Vishnu** சாஸ்திரிகள் பல இடங்களுக்குச் சென்று தற்போது கனடா வந்துள்ளார். இவர் கைரேகை, ஜாதகம், முக நாடி ஆகியவை கொண்டு மிகத்துல்லியமாக நடந்தவை, நடக்கவிருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார். இவற்றையெல்லாம் அறிந்து பரிகாரம் செய்து கொள்ள ஒருமுறை இவரைச் சந்தியுங்கள்..!

கண்ணூறு, நாவூறுக்கு வெள்ளிக்கிழமைகளில் இலவசமாக நூல் கட்டப்படும்

- கைரேகை
- நாம சட்சத்திரம்
- கல்வி, உத்தியோகம்
- தொழில், வியாபாரம்
- இலட்சுமி வசீகரம்
- வதிவிடப் பிரச்சனைகள்
- வெளிநாட்டுப் பயணங்கள்
- பெண்பிள்ளைகள் - பெற்றார் பிரச்சனைகள்
- நீதிமன்ற வழக்குகள்
- திருமண யோகம்
- குழந்தைப் பாக்கியம்
- சர்ப்ப தோஷம்
- கர்ப்பதோஷம்
- கஸ்ட - நஸ்டங்கள்
- வாகனப் பொருத்தம்
- ஒன்று கூடுதல்

**100% Guarantee**

**Private & Confedential**

அகோரா சாமயாகளடம சென்று மநதரஙகள கறறு கொணட ஓம பரகாஷ

**2697 Eglinton Ave E, Scarborough ON**
**Next to CIBC Bank (BRIMLEY & EGLINTON)**

**437-217-3345**

# LEASE TO OWN



$58.88 WEEKLY +TAX

**2020 COROLLA L CVT**

1.69% LEASE FOR 60 MONTHS, 20,000 km/year

# LEASE TO OWN



$88 WEEKLY +TAX

**2020 RAV-4 LE FWD**

4.99% LEASE FOR 60 MONTHS, 20,000 km/year

# USED CARS

**COROLLA - 10 IN STOCK**
From $10,600 + tax - 2012 & up

**CAMRY - 10 IN STOCK**
From $17,700 + tax - 2015 & up

**RAV-4 - 15 IN STOCK**
From $14,500 + tax - 2012 & up

**SIENNA - 5 IN STOCK**
From $30,363 + tax - 2017 & up

# USED VEHICLES

HONDA · LEXUS · BMW · LAND ROVER

# YORKDALE TOYOTA

3080 Dufferin Street
Toronto, ON M6A 2S6

**Dufferin & Lawrence**

www.yorkdaletoyota.com

**NO CREDIT BAD CREDIT NO PROBLEM!**

# LEASE TO OWN



$90 WEEKLY +TAX

**2020 CAMRY SE**

0% LEASE FOR 39 MONTHS, 20,000 km/year

**FOR TONY SIVA'S CLIENTS!!!**

**$500 GAS CARD**

GAS CARD

with every purchase of New or Used Vehicle

**$0 DOWN on New or Used Vehicles**



புதிய பாவித்த வாகனங்களை தமிழில் உரையாடி மலிவு விலையில் பெற்றுக்கொள்ள அழையுங்கள்

## Tony Siva

**647-269-0749** tonymidtown@hotmail.com

**www.yorkdaletoyota.com**

# இவ்வார ராசிபலன்

**21-08-2020 வெள்ளி தொடக்கம் 27-08-2020 வியாழன் வரையும்**




**மேஷம்:** பொருளாதாரத்தில் சிறப்பும் வாழ்வாதாரத்தில் பொறுப்பும் சேரக்கூடிய வாரம். வெகுமதி பெருகும். வாகன செலவு ஏற்படும். புதிய நட்பு உருவாகும். உத்தியோகம் இடமாற்றம் ஏற்படும். விருந்தினர்கள் வருகை உண்டு. பிள்ளைகள் வழியில் செலவுகள் ஏற்படும். குடும்ப அன்யோன்யம் கூடும். உடல்நலனில் அக்கறை தேவை. அடுத்த நபரால் ஆதாயம் உண்டு. திடீர் செலவு ஏற்படும்.
வழிபடவேண்டிய தெய்வம்: சுக்கிர பகவான், அதிர்ஷ்ட எண்: 6,3,2,1
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,L




**ரிஷபம்:** பெண்களால் ஆதாயமும் பிள்ளைகளால் பெருமையும் சேரக்கூடிய வாரம். வியாபாரம் லாபம் தரும். உறவினர்களால் உதவி கிட்டும். உயர்கல்வி ஆர்வம் தேவைகள் அதிகரிக்கும். மற்றவர்களால் அனுகூலம் உண்டு. உடல் ஆரோக்கியம் கூடும். மங்கள செய்தி வரும். வார்த்தைகளில் ஏற்படும். மாணவர்கள் உற்சாகம் கூடும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். நிதானம் நல்லது.
வழிபடவேண்டிய தெய்வம்: மீனாட்சிஅம்மன், அதிர்ஷ்ட எண்: 9,6,4,7
அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,H




**மிதுனம்:** வருமானமும் வெகுமானமும் அதிகரிக்கக் கூடிய வாரம். யோகமான வாரம். பெற்றவர்கள் பாராட்டு கிட்டும். வினோதமான எண்ணங்கள் விலகும். புதிய முயற்சிகள் பலன் தரும். பிள்ளைகள் தொல்லை அதிகரிக்கும். மனைவியால் மருத்துவச் செலவு உண்டு. புண்ணியஸ்தலம் செல்ல வேண்டி வரும். பழைய நண்பரால் பணவரவு உண்டு.
வழிபடவேண்டிய தெய்வம்: சயன கணபதி, அதிர்ஷ்ட எண்: 5,0,5,4
அதிர்ஷ்ட நிறம்: அரக்கு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,A




**கடகம்:** ஆசைப்பட்ட பொருட்களும் அசையா சொத்துக்களும் சேரக்கூடிய அற்புதமான வாரம். வினோதமான எண்ணங்கள் பூர்த்தியாகும். கன்னிப் பெண்களுக்கு சுபச் செய்தி வரும். கால்நடைகளால் பலன் உண்டு. ஸ்டேஷனரி தொழில் லாபம் தரும். பிள்ளைகளால் செலவு அதிகரிக்கும். ஆடை, அணிகலன்கள் சேரும். மனச்சஞ்சலம் ஏற்படும். பழைய கடன் பஞ்சாயத்து மூலம் தீர்வுக்கு வரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: மங்கள மாரியம்மன், அதிர்ஷ்ட எண்: 8,5,1,3
அதிர்ஷ்ட நிறம்: நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,L




**சிம்மம்:** எதிர்ப்புக்களால் சிறப்பும், போட்டிகளால் பொறுப்பும் கிடைக்கக்கூடிய சோதனையான வாரம். உத்தியோகப் பெண்களுக்கு பதவி உயர்வு கிட்டும். சம்பள பாக்கிகளும் வந்து சேரும். பொருளாதாரம் உயரும். முதலீடு உண்டாகும். தொலை தூர தொடர்பு லாபம் தரும். பாக்கெட்டில் காசு கரையாது. நினைத்தது நடக்கும். பெற்றோர்களால் பாராட்டுப் பெறுவீர்கள். செலவுகள் குறையும்.
வழிபடவேண்டிய தெய்வம்: சுவாமி தார்மசாஸ்த்தா, அதிர்ஷ்ட எண்: 2,4,5,9
அதிர்ஷ்ட நிறம்: பொன் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,Q




**கன்னி:** பாக்கியவான்களின் சந்திப்பால் பணவரவு அதிகரிக்கக் கூடிய பக்குவமான வாரம். மகிழ்ச்சி அதிகரிக்கும் வாரம். விவேகம் அதிகரிக்கும். கலை ஈடுபாடு அதிகரிக்கும். கமிஷன் தொழில் திருப்தி தரும். வாகன மாற்றம் உண்டு. தொழில் விருத்தி உண்டு. வரவுகள் திருப்தி தரும். இடமாற்றம் நன்மை தரும். உத்தியோக உயர்வு உண்டு. சச்சரவுகள் அகலும். குடும்ப கௌரவம் உயரும். ஆபரணச் சேர்க்கை உண்டு. மறைமுக எதிர்ப்பு விலகும்.
வழிபடவேண்டிய தெய்வம்: தேவி காளிகாம்பாள், அதிர்ஷ்ட எண்: 0,7,2,9
அதிர்ஷ்ட நிறம். சில்வர் கிரே, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,X




**துலாம்:** வீண் வம்புகள் விலகி, வீண் விரயங்களும் குறையக் கூடிய அற்புதமான வாரம். தங்க நகைகள் சேரும். கூட்டுத் தொழிலில் கவனம் தேவை. பொருள் இழப்பு ஏற்படும். சகோதரியால் அனுகூலம் உண்டு. ஆபரணச் சேர்க்கை உண்டு. கலைத்துறையில் திருப்பம் உண்டு. மாணவர்கள் கவனம் தேவை. கடன் சுமை அதிகரிக்கும். காரியத்தடை ஏற்படும். உறவினர்களால் நன்மை உண்டு. எதிரிகளால் தொல்லை உண்டாகும்.
வழிபடவேண்டிய தெய்வம்: ஏழுமலை ஆண்டவர், அதிர்ஷ்ட எண்: 2,1,0,8
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,D




**விருச்சிகம்:** திருப்புமுனைகளைச் சந்திக்கக் கூடிய பொறுப்பு மிகுந்த வாரம். பணியில் உயர்வு உண்டு. புதிய பதவிகள் கிட்டும். உடல் நலம் சீராகும். மற்றவரால் பாராட்டுப்படுவீர்கள். புஷ்ப வழிபாடு புண்ணியம் சேர்க்கும். பயணத்தால் அனுகூலம் உண்டு. குடும்ப அன்யோன்யம் கூடும். பொறுப்புகள் கூடும். பொருள் வரவு திருப்தி தரும். இடமாற்றம் நன்மை தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: திருமுருகக்கடவுள், அதிர்ஷ்ட எண்: 1,2,6,9
அதிர்ஷ்ட நிறம்: நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,N




**தனுசு:** தன்னிகரற்ற தன்மையும், தலைசிறந்த பதவியும் கிடைக்கக் கூடிய தன்மையான வாரம். குதூகலப் பயணம் உண்டு. நிதி நிறுவனம் லாபம் தரும். தொழில் உற்பத்தி அதிகரிக்கும். இனிக்கும் சம்பவம் அமையும். விவசாய விளைச்சல் அதிகரிக்கும். தொழில் நிம்மதி கொடுக்கும். ஆலய வழிபாடு ஆறுதல் தரும். பெண்களுக்கு யோகம் கூடும். நல்வர் நட்பு உருவாகும். தோல்வி நிலை மாறும் கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும்.
வழிபடவேண்டிய தெய்வம்: பஞ்சபூதக்கடவுள், அதிர்ஷ்ட எண்: 7,4,6,9
அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,C




**மகரம்:** விருப்பப்பட்ட திருப்பங்களை பொருத்தமாக சந்திக்கக் கூடிய திருத்தமான வாரம். பொறாமை விலகும். குதுகலம் சேரும். வருமானம் வரும். கல்வி ஆர்வம் கூடும். கட்டிடத் தொழில் லாபம் தரும். பதவி வாய்ப்பு வரும். பிள்ளைகளால் தொல்லை உண்டு. பூமி லாபம் உண்டு. தான தர்மங்கள் பலன் தரும். பணவரவு உயரும். பொருளாதாரம் உயரும். மங்கள செய்தி வரும். முயற்சிகள் பலன்தரும். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். அடுத்தவர் தலையீடு தவிர்க்கவும்.
வழிபடவேண்டிய தெய்வம்: நவ தேவதை, அதிர்ஷ்ட எண்: 2,4,6,8
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,U




**கும்பம்:** புகழும் புண்ணியமும் கிடைக்கக் கூடிய கண்ணியமான வாரம். குதுகலம் தாண்டவமாடும். ஸ்திர சொத்து சேரும். தெய்வீக ஈடுபாடு வெளிப்படும். கணவன் மனைவி ஒற்றுமை கூடும். ஆபரணச் சேர்க்கை உண்டு.பயணம் அனுகூலம் தரும். பணவரவு உண்டு. பங்கு சந்தை லாபம் தரும்.முயற்சிகள் பலன் தரும். வெறுப்புகள் அகலும், சிறப்புகள் சேரும். தாய் நலனில் கவனம் தேவை. நிதி பற்றாக்குறை நீங்கும். உடல் சோர்வு ஏற்படும். கல்வி ஈடுபாடு கூடும்.
வழிபடவேண்டிய தெய்வம்: வேலவப்பெருமாள், அதிர்ஷ்ட எண்: 7,3,5,2
அதிர்ஷ்ட நிறம்: வாடா மல்லி: அதிர்ஷ்ட எழுத்துக்கள்: B,T




**மீனம்:** வருத்தம் இல்லா வாழ்க்கையை பொருத்தமாகச் சந்திக்கக் கூடிய அற்புதமான வாரம். லாபமான வாரம். நிதி நிலமை சீராகும். முயற்சிகள் வெற்றி தரும். நற்காரியங்களில் ஈடுபடுவீர். உறவினர்களால் அனுகூலம் உண்டு. அரசு வகையில் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் விருத்தி ஏற்படும். புதிய வாய்ப்பு தேடி வரும். மாணவர் பாராட்டு பெறுவர். சந்தோஷம் பெருகும். ஆபரணச் சேர்க்கை உண்டு. விரும்பிய பொருள் சேரும். வாழ்வில் வளம் உண்டு.
வழிபடவேண்டிய தெய்வம்: பிரளய தேவி, அதிர்ஷ்ட எண்: 0,9,3,6
அதிர்ஷ்ட நிறம்: அடர்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: E,Z




ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377


# சிவாஜியும் தமிழ்ச் சினிமாவும்

(17ம் பக்கத் தொடர்ச்சி)

சேரன்: சொல்லட்டுமா? சோழன் மகளை சேரன் மணந்தான். சேரனுக்கு ஒரு செல்வன் பிறந்தான். செல்வன் இந்த சிலையை மனந்தான்.
வேண்மாள்: தெரிந்த கதை தானே இது!
சேரன்: சுவைக்காது கண்ணே அது!
வேண்மாள்: ம்... காதல் கதையொன்று....
சேரன்: உஹீம்... "இதோ புறநானூற்றிலே...
வேண்மாள்: போதும்.... வீரக்கதை தானே..?
சேரன்: வீரத்தை மணந்த காதல் கதை. தந்தையையும் கணவனையும் பறிகொடுத்த பெண்ணொருத்தி தன் மகனையும் போருக்கு அனுப்பிய புறக்காட்சி. வேண்மாள், கொஞ்சம் கேளேன். நானே எழுதி இருக்கிறேன் புதிய நடையில்.

"காவிரி தந்த தமிழகத்து புது மணலில் களம் அமைத்து சேர சோழ பாண்டிய மன்னர் கோபுர கலசத்தில் யார் கொடிதான் பறப்பது என்று இன்றுபோல் போர் தொடுத்துக் கொண்டிருந்த காலம் அது!

அந்நாளில் போர்க்களத்தில் தாய் நாடு காக்க தாவிப் பாய்ந்து செத்தார் தந்தை என்ற செய்திகேட்டு தணலில் மெழுகானாள் தமிழகத்து கிளி ஒருத்தி! அனல் போலும் கண்ணுடனே அயலூர் சென்றிருந்த அவள் கணவனும் வந்திட்டான்.

புனல் போக்கும் விழியாளே
அவள் போர்ச் செய்தி தந்திட்டாள்!

தந்தை களம் பட்ட செய்திக்கோ தவித்தாய் என்றான். இல்லை அன்பரே! முல்லை தமிழ் இந் நாட்டுப் படையிலோர் வீரர் குறைந்துவிட்டால் நல்ல உடையில் ஓர் கிழிசல் வந்தது போல் அன்றோ! இனி தடையின்றி நுழைவரோ பகைவர் என எண்ணினேன். அடைபட்ட கண்ணீர் அணை உடைந்தது அத்தான் என்றாள்!
அவன் குகை விட்டுக் கிளம்பும் ஒரு புலி என புகைவிட்டு குமுறும் எரிமலையெனப்பகை வெட்டிச் சாய்க்கும் வாளெடுத்தான்! சூளுரைத்தான். சுடர் முகம் தூக்கினான் சுக்கு நூறுதான் வீழ்ந்து வரும் பகை என்றான் நாடு மீட்காமல் வீடு திரும்பேன் என்றான். நங்கையோ நகை முழக்கம் செய்து நடந்திடுக கண்ணே என்றாள்!

திரும்பி வருவேனோ இல்லையோ எதற்கும் இப்போது ஒரு முத்தம். இந்தா திரும்பு என்றான்! கொடுத்தான் பின் தொடுத்தான் பகைவர் மீது பாணம். போர்.. போர்.. போர்.. எனவே முழங்கிற்று முரசொலி! பார் பார் பார் அந்தப் பைங்கிளியின் உரிமையாளன் பகைவர் மீது பாய்ந்து கொள்ளும் வீரம் பார் என்று பட்டாளத்து தோழர் எல்லாம் வியந்துரைத்தனர். அந்தக் கட்டாணி முத்தாளும் கண் விழியை சிந்திட்டாள் களத்திலே அத்தானுக்கு அடுக்கடுக்காய் குவிந்து வரும் வெற்றிகளை கேட்டுவிட்டு. கோட்டைகள் விடுபட்டன. எதிரியின் குதிரை கால்கள் உடைபட்டன. வேழப்படை முறிபட்டது. வேல்கள் பொடிபட்டன. எம் கொற்றவன் படைகள் கொட்டும் பேரிகை கோடையிடியெனக் கேட்குது எனக் குதித்திட்டாள்.! புதுப்பண் அமைந்திட்டாள்....

இன்னும் மூன்று நிமிட உரையாடல் உள்ளது ஆவல் மேலிட்டால் "ராஜா ராணி" படத்தில் வரும் சேரன் செங்குட்டுவன் நாடகத்தைப் பார்த்து மகிழுங்கள். சிவாஜி தமிழை செவிமடுத்து கேளுங்கள், தமிழின்பம் பருகுங்கள்!

காட்சிகள் விரியும் அடுத்த வாரம்...

Ontario வில் அரச அங்கீகாரம் பெற்ற

# கனகாம்பிகை

## தங்கநகை அடகுமாடம்

KANAGAAMBIKAI

PAWN BROKERS





25
வருடங்கள்

**உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த வட்டி வீதத்தில் தங்க நகை அடவு**

**நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய**

ஒரே கூரையின் கீழ்

# கனகாம்பிகை

## பவுண் வங்கி

**தங்கம் வாங்க கனகாம்பிகைக்கு வாங்க...**

2613 Eglinton Ave. East, Scarborough ON M1K 2S2

416 269 7198

# சித்த மருத்துவம் மாற்றான் தாய் மனப்பான்மையுடன் நடத்தப்படுகிறது ; மத்திய அரசு மீது உயர் நீதிமன்றம் அதிருப்தி



சித்த மருத்துவத்தை மாற்றான் தாய் மனப்பான்மையுடன் நடத்துவதாக மத்திய அரசு மீது சென்னை உயர் நீதிமன்றம் அதிருப்தி தெரிவித்துள்ளது.கரோனா தொற்றுக்கு மருந்து கண்டுபிடித்துள்ளதாக கூறி வீடியோ வெளியிட்டதாக கைது செய்யப்பட்ட சித்த மருத்துவர் தணிகாச்சலத்தை, குண்டர் சட்டத்தில் சிறையில் அடைக்க சென்னை மாநகர காவல் ஆணையர் உத்தரவு பிறப்பித்தார்.

இந்த உத்தரவை ரத்து செய்யக் கோரி தணிகாச்சலத்தின் தந்தை கலியபெருமாள், சென்னை உயர் நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.இந்த வழக்கு கடந்த முறை விசாரணைக்கு வந்தபோது, இந்திய மருத்துவ துறைகளான ஆயுர்வேதம், சித்தா, யுனானி உள்ளிட்ட மருத்துவ துறைகளுக்கு கடந்த 10 ஆண்டுகளில் எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டது என்பது குறித்து அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிடப்பட்டிருந்தது.இந்த வழக்கு நீதிபதிகள் கிருபாகரன், வேலுமணி அமர்வில் இன்று (ஆக.20) மீண்டும் விசாரணைக்கு வந்தது.

அப்போது, மத்திய அரசுத்தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கையில், கடந்த 10 ஆண்டுகளில் ஆயுர்வேதா துறைக்கு 3,000 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், சித்த மருத்துவ துறைக்கு 437 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.இந்த அறிக்கையை படித்த நீதிபதிகள், மத்திய அரசு மாற்றான் தாய் மனப்பான்மையுடன் நடந்து கொள்வது ஏன் எனவும், சித்த மருத்துவத்துக்கு, பிற மருத்துவ துறைகளை விட குறைந்த நிதி ஒதுக்கியுள்ளது துரதிருஷ்டவசமானது எனவும் அதிருப்தி தெரிவித்தனர்.

மேலும், ஆயுஷ் அமைச்சகத்தின் பெயரில் இருந்து, சித்த மருத்துவத்தைக் குறிப்பிடும் 'எஸ்' என்ற எழுத்தை நீக்கிவிடலாம் என கண்டனம் தெரிவித்தனர். இதுசம்பந்தமாக விளக்கமளிக்க அவகாசம் வழங்க வேண்டும் என மத்திய அரசுத்தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டது.இதை ஏற்ற நீதிபதிகள், விசாரணையை அடுத்த வாரத்துக்குத் தள்ளிவைத்தனர்.

## வீடுகளிலேயே விநாயகர் சதுர்த்தியை கொண்டாட வேண்டும்: தமிழக அரசு வேண்டுகோள்



பொதுமக்கள் அவரவர் வீடுகளிலேயே விநாயகர் சதுர்த்தி விழாவை கொண்டாட வேண்டும் என்று தமிழக அரசு வலியுறுத்தி உள்ளது. தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

* பொதுமக்கள் அவரவர் வீடுகளிலேயே விநாயகர் சதுர்த்தி விழாவை கொண்டாட வேண்டும்.

* தமிழகத்தில் விநாயகர் சிலையை பொது இடங்களில் வைக்க, ஊர்வலம் செல்ல தடை தொடருகிறது.

* கொரோனாவை தடுக்க அரசு எடுக்கும் நடவடிக்கைக்கு முழு ஒத்துழைப்பை நல்க வேண்டும்.

* மதம் சார்ந்த விழாக்கள், கூட்டு வழிபாட்டுக்கு நாட்டின் அனைத்து பகுதிகளிலும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

* வழக்குகளை விசாரித்த ஐகோர்ட்டும் அரசின் ஆணையை மக்கள் பின்பற்ற அறிவுறுத்தி உள்ளது.

* மத்திய, மாநில அரசுகளின் ஆணைகளையும், வழிகாட்டு நெறிமுறைகளையும் பின்பற்ற வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## மத்திய அரசை பின்பற்றியே தமிழகத்தில் மத ஊர்வலங்களுக்கு தடை முதலமைச்சர்

மத்திய அரசை பின்பற்றியே மத ஊர்வலங்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி கூறினார்.

மத்திய அரசை பின்பற்றியே தமிழகத்தில் மத ஊர்வலங்களுக்கு தடை முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி.

வேலூர், திருப்பத்தூர், ராணிப்பேட்டை மாவட்டங்களில் மேற்கொள்ளப்படும் கொரோனா தடுப்பு பணிகள் குறித்து முதல்வர் விளக்கம் அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

* வேலூர், திருப்பத்தூர், ராணிப்பேட்டை மாவட்டங்களில் கொரோனா பாதிப்பு கட்டுக்குள் இருக்கிறது.

* கொரோனா பாதிப்பை கண்டறிவதற்கு வேலூரில் 2,609 காய்ச்சல் முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன.

* ராணிப்பேட்டை மாவட்டத்தில் 3,350 காய்ச்சல் முகாம்கள் நடைபெற்றுள்ளன.

* திருப்பத்தூர் மாவட்டத்தில் சுய உதவிக்குழுக்களுக்கு 3 ஆண்டுகளில் ரூ.583.45 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

* சிறப்பு குறைதீர் திட்டம் மூலம் தீர்வு காணப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை: வேலூர் 11,667, ராணிப்பேட்டை 7,524, திருப்பத்தூர் 4,650

* கொரோனாவை தடுக்க குடும்ப அட்டையில் பெயர் உள்ள அனைவருக்கும் விலையில்லா முகக்கவசம் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

# வேளாங்கண்ணி பேராலயத் திருவிழா ஆக. 29ல் தொடக்கம்: இந்த ஆண்டு பக்தர்களுக்கு அனுமதி இல்லை நிகழ்வுகள் நேரலை

நாகப்பட்டினம் மாவட்டம் வேளாங்கண்ணியில் உள்ள புகழ்பெற்ற புனித ஆரோக்கிய அன்னை ஆலய ஆண்டுத் திருவிழா ஆகஸ்ட் 29ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்க உள்ளது. இதையடுத்து, கரோனா காரணமாகத் திருவிழாவின் எந்த நாளிலும் பக்தர்கள் பங்கேற்க அனுமதி இல்லை என்று தேவாலயம் அறிவித்துள்ளது. மத நல்லிணக்கத்திற்கு அடையாளமாகவும், ஆன்மிகச் சுற்றுலாத் தலமாகவும் விளங்கும் வேளாங்கண்ணி மாதாப் பேராலயம் உலகெங்கும் லட்சோப லட்சம் பக்தர்களைக் கொண்டது.

கிறிஸ்துமஸ் காலங்களிலும் தேவாலயத்தின் பிற திருவிழாக் காலங்களிலும் பல லட்சம் பக்தர்கள் இங்கு வந்து வேளாங்கண்ணி மாதாவை வழிபட்டுச்செல்வர். சனி, ஞாயிறு உள்ளிட்ட விடுமுறை நாட்களிலும் வேளாங்கண்ணியில் பக்தர்கள் கூட்டம் அலைமோதும். ஆனால், இந்த ஆண்டு பக்தர்களே இல்லாமல் திருவிழா நடைபெற இருக்கிறது.கரோனா தொற்றுப் பரவல் அச்சம் காரணமாக, பொதுமுடக்கம் அறிவிக்கப்பட்டதில் இருந்தே வேளாங்கண்ணியில் பக்தர்களுக்கு அனுமதி அளிக்கப்படவில்லை.



தினமும் நடைபெறும் திருப்பலி பூஜைகள் மட்டுமே நடைபெற்று வருகின்றன. இந்த நிலையில் வேளாங்கண்ணி ஆலயத் திருவிழா 29ம் தேதி சனிக்கிழமை அன்று கொடியேற்றத்துடன் தொடங்குகிறது.அன்றைய தினம் மாலை 5 மணிக்கு தஞ்சை ஆயர் தேவதாஸ் அம்புரோஸ் பங்கேற்றுக் கொடியேற்றத்தை நடத்தி வைக்கிறார். அதனைத் தொடர்ந்து நடைபெறும் திருப்பலி பூஜையையும் நடத்தி வைக்கிறார். மறுநாள் 30ம் தேதியில் இருந்து செப்டம்பர் 8ம் தேதி வரை 9 நாட்களும் தினமும் பல்வேறு மொழிகளில் சிறப்பு திருப்பலியும், செபமாலை அன்னையின் மன்றாட்டுகள், நவநாள் ஜெபம் உள்ளிட்டவையும் நடைபெறும்.

திருவிழாவின் முக்கிய நிகழ்வுகள் அனைத்தும் தனியார் தொலைக்காட்சி சேனல்கள் மற்றும் சமூக ஊடகங்கள் வழியாக நேரலை செய்யப்படுகிறது. நிறைவு நாளான செப்டம்பர் 8ம் தேதியன்று நடைபெறும் திருவிழா சிறப்பு திருப்பலியில், தஞ்சை ஆயர் தேவதாஸ் அம்புரோஸ் கலந்து கொண்டு நடத்தி வைக்கிறார். அன்றைய தினம் மாலை கொடி இறக்கம் நடைபெறும். இந்த ஆண்டு நடைபெறும் வேளாங்கண்ணி பேராலய விழாவில் பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொள்ள அனுமதி அளிக்கப்படாது என்று பேராலயம் தரப்பில் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், வேளாங்கண்ணி பேராலய விழாவில் பொதுமக்கள் கலந்து கொள்ளத் தடை விதித்து மாவட்ட நிர்வாகமும் தற்போது அறிவிப்பு வெளியிட்டுள்ளது. பொதுமக்கள் மாவட்ட நிர்வாகத்திற்கு முழு ஒத்துழைப்பு தர வேண்டும் என்று மாவட்ட ஆட்சியர் பிரவீன் பி. நாயர் மற்றும் மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் செ.செல்வநாகரத்தினம் ஆகியோர் பொதுமக்களைக் கேட்டுக் கொண்டுள்ளனர்.

## பாடகர் எஸ்பிபி உடல் நலம் பெற வேண்டி குடியாத்தம் பகுதியில் கூட்டுப் பிரார்த்தனை; நடிகர் சங்கத்தினர் பங்கேற்பு

பிரபல திரைப்பட பின்னணி பாடகர் எஸ்.பி.பாலசுப்பிரமணியம் உடல் நலம் பெற வேலூர் மாவட்ட நடிகர் சங்கம் சார்பில் குடியாத்தம் பகுதியில் இன்று கூட்டுப்பிரார்த்தனை நடைபெற்றது.தமிழ் திரையுலகின் முன்னணி பாடகரான எஸ்.பி.பாலசுப்பிரமணியம் கரோனா நோய் தொற்றால் பாதிக்கப்பட்டு சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் கடந்த 5ம் தேதி அனுமதிக்கப்பட்டார். ஆரம்பத்தில், தான் நலமாக இருப்பதாக வீடியோ வெளியிட்ட எஸ்.பி.பி.யின் உடல் நிலை கடந்த 13ம் தேதி மோசமடைந்தது.

இதைதொடர்ந்து, தீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்ட எஸ்.பி.பி.க்கு வென்டிலேட்டர், எக்மோ கருவிகளை கொண்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. எஸ்.பி.பி.யின் உடல்நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும், உயிர்காக்கும் மருத்துவ கருவிகளை கொண்டு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும் மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்தது.இந்நிலையில், எஸ்.பி.பி.யின் நெருங்கிய நண்பரும் பிரபல இசையமைப்பாளருமான இளையராஜா, இயக்குநர் பாரதிராஜா, நடிகர் ரஜினிகாந்த் ஆகியோர் எஸ்.பி.பி. உடல்நலம் பெற்று விரைவில் வீடு திரும்ப வேண்டும் என்றும், அதற்காக உலகில் உள்ள எஸ்.பி.பி.யின் ரசிகர்கள், திரைப்பட நடிகர்கள், இசையமைப்பாளர்கள், பாடலாசிரியர்கள், பின்னணி பாடகர்கள் என அனைவரும் இன்று (ஆக.20) மாலை 6 மணியளவில் அவரவர் வீட்டில் இருந்தபடியே கூட்டு பிரார்த்தனை செய்ய வேண்டும் என வேண்டுகோள் விடுத்தனர்.

அதன்படி, வேலூர் மாவட்ட நடிகர் சங்கம் மற்றும் நாடக கலைஞர்கள் ஒன்றிணைந்து குடியாத்தம் படவேட்டம் கோயில் அருகே இன்று கூட்டுப்பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.பிரபல சண்டைப்பயிற்சியாளர் ஜூடோ ரத்தினம் நிகழ்ச்சிக்கு தலைமை வகித்து, எஸ்.பி.பி. உடல் நலம் பெற வேண்டி கற்பூரம் ஏற்றி இறைவனை வழிபட்டார். இதைத்தொடர்ந்து, நூற்றுக்கணக்கான நாடக நடிகர்கள், தெருக்கூத்து கலைஞர்கள் ஒன்று சேர்ந்து கூட்டுப்பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.

# நுனி நாக்கில் தேன் அடி நாக்கில் நஞ்சு வைத்துப் பேசும் பிரதமர் மகிந்த இராசபக்ச!

கனடா - நக்கீரன்



நுனி நாக்கில் தேன் அடி நாக்கில் நஞ்சு வைத்துப் பேசுபவர்கள் இருக்கிறார்கள். இந்தக் கலையில் முனைவர் பட்டம் பெற்றவர் மகிந்த இராசபக்ச. அமைச்சரவையில் சிறுபான்மையினருக்கு போதிய பிரதிநித்துவம் வழங்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் ஊடகவியலாளர்களால் முன்வைக்கப்பட்ட போது அவர் பின்வருமாறு பதில் அளித்திருக்கிறார்.

"சிறுபான்மை இனம், பெரும்பான்மை இனம் என்ற வேறுபாடு இராஜபக்சக்களின் ஆட்சியில் இல்லை. அனைத்து இன மக்களும் இலங்கை மாதாவின் பிள்ளைகள். இன ரீதியில் எவருக்கும் நாம் அமைச்சுகளை வழங்கவில்லை.

தகுதி நிலையில் உள்ளவர்களுக்கே அமைச்சுப் பதவிகளை சனாதிபதி வழங்கியுள்ளார்.

அதேவேளை, ஒவ்வொரு மாவட்டங்களுக்கும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர்களையும் நியமித்துள்ளோம். வடக்கிலுள்ள சகல மாவட்டங்களுக்கும் அபிவிருத்திக் குழுத்தலைவர்களாக தமிழ்ப் பிரதிநிதிகளையே நியமித்துள்ளோம். அவர்களில் ஒருவர்முஸ்லிம் பிரதிநிதி. அதேவேளை, கிழக்கில் மட்டக்களப்பு மாவட்டத்துக்கும் அபிவிருத்திக் குழுத் தலைவராக தமிழ்ப் பிரதிநிதி ஒருவரையே நியமிக்கத் திட்டமிட்டுள்ளோம்.

அமைச்சுகளின் எண்ணிக்கை வரையறைக்கேற்ப மேலும் தகுதியானவர்களை இணைத்துக்கொள்வோம்.

புதிய அமைச்சரவையில் தமிழர் ஒரு வரும் முஸ்லிம் ஒருவரும் என இரண்டு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் மட்டுமே நியமிக்கப்பட்டுள்ளனர். இராசாங்க அமைச்சுகளிலும் தமிழர்கள் இருவர் மட்டுமே நியமிக்கப்பட்டுள்ளனர், முஸ்லிம்களில் எவருமே நியமிக்கப்பட வில்லை எனவும் எதிரணியினர் இனவாதத்தைத் தூண்டும் வகையில் தமிழ், ஆங்கில, சிங்கள ஊடகங்களில் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

சிறுபான்மை இனத்தவர்களில் நால்வருக்கு மட்டுமே புதிய அமைச்சரவையில் இடம் கிடைத்துள்ளது என்பதே எதிரணியினரின் இனவாதப் பரப்புரையின் தலைப்பாக உள்ளது. சிறுபான்மை இன மக்களை இந்த அரசு புறக்கணித்துள்ளது என்ற விசமத்தனமான சிந்தனையை தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் எதிரணியினர் விதைக்க முற்படுகின்றனர்.

நாட்டிலுள்ள அனைத்து இன மக்களையும் ஒரே கண்ணோட்டத்திலேயே நாம் பார்க்கின்றோம். எந்த இனத்தையும் இனவாத நோக்குடன் நாம் பார்க்கவில்லை. ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான அரசே தமிழ் மக்களுக்குத் தீர்வு வழங்கியது என்ற வரலாற்றுப் பதிவை இந்த ஆட்சியில் நாம் ஏற்படுத்துவோம்."

தகுதியானவர்களுக்கே அமைச்சர், இராசாங்க அமைச்சர் பதவிகளை வழங்கியுள்ளோம். அப்படியிருக்க "எதிரணியினர் இனவாதத்தைத் தூண்டும் வகையில் தமிழ், ஆங்கில,சிங்கள ஊடகங்களில் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்" எனச் சொல்வதின் மூலம் தன்னைத் தேசியவாதியாக சித்திரிக்கிப் பார்க்கிறார். ஆனால் சாத்தான் வேதம் ஓதுகிறது ஆகவே நாம் பார்க்கிறோம்!

இப்படி இனிக்கப் பேசித் தமிழர்களது கழுத்தை நோகாமல் வெட்டுவது இது முதல் தடவை அல்ல. முன்னரும் பல சிங்களத் தலைவர்கள் இப்படிப் பேசியிருக்கிறார்கள்.

சுயாதீன இலங்கையின் சோல்பரி அரசியலமைப்பிற்கு வாக்களிக்குமாறு தமிழ் உறுப்பினர்களை வலியுறுத்தி 1945 ஒக்தோபரில் சட்ட சபையில் உரையாற்றிய டி.எஸ். சேனநாயக்கவின் பின்வருமாறு பேசியிருந்தார்,

"நீங்கள் இலண்டனில் இருந்து ஆளப்பட விரும்புகிறீர்களா அல்லது இலங்கையை இலங்கையர் ஆள விரும்புகிறீர்களா? இலங்கை தேசிய காங்கிரஸ் சார்பாகவும் மற்றும் எனது சார்பாகவும், சிறுபான்மை சமூகங்களுக்கு ஒரு சுதந்திரன் லங்காவில் எங்களால் (சிங்களவர்களால்) உங்களுக்கு எந்தத் தீங்கும் நேராது என நான் உறுதியளிக்கிறேன்.

DS Senanayake who addressing the State Council in October 1945 urging Tamil members to vote for the Soulbury constitution of independent Ceylon said:

"Do you want to be governed from London or do you want as Ceylon, to help govern Ceylon? On behalf of the (Ceylon National) Congress (founded by Sir Ponnambalam Arunachalam in 1919) and on my behalf, I give the minority communities the sincere assurance that no harm need you fear at our hands in a free Lanka."



சேனநாயக்க குறிப்பிடும் இலங்கைத் தேசிய காங்கிரஸ் சேர் பொன்னம்பலம் அருணாசலம் அவர்களால் உருவாக்கப்பட்டது. நாம் சிங்களவர்களோ தமிழர்களோ அல்ல. நாம் இலங்கையர் என்ற கோட்பாட்டை இலங்கைத் தேசிய காங்கிரஸ் தனது கோட்பாடாக வைத்திருந்து.

இப்படித் தேனொழுகப் பேசிய பெரிய சேனநாயக்கா இலங்கை சுதந்திரம் பெற்ற (1948) அதே ஆண்டில் 800,000 மலையகத் தமிழர்களின் குடியுரிமையைப் பறிக்கும் சட்டத்தை 1948 ஆம் ஆண்டு நொவெம்பர் மாதம் 15 ஆம் தேதி நிறைவேற்றப்பட்டது. அடுத்த ஆண்டு நாடாளுமன்ற தேர்தல் (திருத்த) சட்டத்தின் மூலம் (Parliamentary Elections (Amendment) Act of 1949) அவர்களது வாக்குரிமை பறிக்கப்பட்டது.

இது எப்படியென்றால் கடலுக்குள் வாழும் பெரிய மீன் சின்ன மீனைப் பார்த்துச் சொல்லுமாம் "நண்பா! பரந்து விரிந்து கிடக்கும் இந்தக் கடல் எனக்கும் உனக்கும் பொதுவானது. உனக்கு இடையூறு ஒன்றும் ஏற்படாது. அப்படி வந்தால் அதை நான் பார்த்துக் கொள்வேன்." கொஞ்ச நேரத்தில் பெரிய மீனுக்கு பசியெடுக்கம். உடனே அது சின்ன மீனைப் பிடித்து விழுங்கி விழும். இந்தப் பெரிய மீனைப் போலவே பெரும்பான்மை சிங்கள - பவுத்தர்கள் நடந்து கொள்கிறார்கள். நாடு பெற்ற சுதந்திரம் தங்களுக்கே உரியது என்கிறார்கள். அதற்கு தாளம் போட எங்களுக்குள்ளும் ஆட்கள் இருக்கிறார்கள். 19 ஆவது சட்ட திருத்தத்தைத் முற்றாக நீக்கவும் புதிய அரசியல் யாப்பொன்றைத் தயாரிக்கவும் அமைச்சரவை முடிவு எடுத்துள்ளது. அரசுக்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை இருப்பதால் இவற்றை அரசு நடைமுறைப்படுத்துவது அசாத்தியமாக இருக்கப் போவதில்லை.



# MONEY PROBLEMS?

## பணச்சிக்கலா?

ALL DEBT SOLUTIONS CRR PLAN

**0%வட்டி**

**அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்**

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்ளது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

### நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

### நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.




**தமிழில் தொடர்புகளுக்கு:**

**வசந்தி சிவராஜா - 416-616-3077**

**எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்**

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

**416-671-0577**

**4 இடங்களில் சேவை**

ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலம் சேவை உண்டு

**MISSISSAUGA OFFICE**
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

**SCAROBOROUGH OFFICE**
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

**HEAD OFFICE - TORONTO**
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

**RICHMONDHILL OFFICE**
10255 Yonge St. Suite # 204
Richmondhill

**NORTH YORK OFFICE**
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York



Family Health Team

# Carefirst Family Health Team

## *Accepting New Patients*



## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

**Clinic Location:**

**Carefirst One-Stop Multi Services Centre**

**300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2**

**Tel: (416) 502-2029, www.carefirstfht.com**



# ஈழத்துத் திருக்கோவில்கள் 909



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
416-332-0269 vasantha@rogers.com



## மயூரபதி பத்திரகாளி அம்பாள் ஆலயம்
### - கொழும்பு -

உலகெங்குமுள்ள கோடிக்கணக்கான மக்கள் கொரோனா வைரசினால் பாதிக்கப்பட்டதோடு, பல இலட்சம் மக்கள் தமது இன்னுயிர்களை நீத்த நிலையில் அஞ்சி அஞ்சி வாழும் நிலை காணப்படுகின்றது. செய்வதறியாது அரசுகள் மக்களைக் காப்பாற்ற பல்வேறு வழிகளைக் கையாள்கின்றன. கனடாவில் வதியும் மக்கள் அரசின் வழிகாட்டல்களை ஏற்று பெருமளவு பாதிப்புக்களிலிருந்து தப்பி வாழ்கின்றனர். கனடிய அரசிற்கு அனைவரும் தலைவணங்குவோம். இதேவேளை ரொறன்ரோவில் வாழும் மக்கள் ஒன்ராரியோ தலைமையும், ரொரன்ரோவின் தலைமையும் காட்டும் வழியில் பயணித்து, பேரிழப்புக்களை தவிர்த்து வாழ்கின்றனர். வழிகாட்டிகயாகிய இவர்களுக்கும் நன்றி கூறுவதோடு தொடர்ந்தும் அன்றாடம் இவர்களால் வழங்கப்படும் நெறிமுறைகளையும் ஏற்று வாழ்வது அனைவரும் நலமே வாழ உதவும்.

உயிர்கொல்லி நோயாய் உலகெங்கும் பரவியுள்ள கொரோனா வைரசிலிருந்து தப்பி உயிர்வாழக் கையாள வேண்டியவை:

1. சமூக இடைவெளியைக் கடைப்பிடித்தல்
2. முகக் கவசம் அணிதல்
3. கைகளை அடிக்கடி கழுவுதல்
4. தேவையற்று வெளியே செல்வதைத் தவிர்த்தல்
5. அரசின் ஆணையை ஏற்று வீட்டில் இருத்தல்

இந்த ஐந்து நெறிமுறைகளுமே உயிர்களைப் பலிகொள்ளும் கொரோனா என்ற கொடிய வைரசை ஒழிக்க உதவும் நடைமுறைகளாகும். இந்த ஐந்து நடைமுறைகளையும் அனைவரும் பின்பற்றி நலமுடன் வாழ்வோம்.

நாமும் நலம்பெற்று, உலகமக்களும் நலமே வாழ, ஆத்மசுத்தியோடு இறைவனைப் பிரார்த்திப்போம். சிவவழிபாட்டிலே நோய் பிணி மற்றும் மரணத்தை வெல்லும் மந்திரமாக மகா ம்ருத்தும்ஜெய மந்திரம் கூறப்பட்டுள்ளது. இறைவனை வழிபடும்பொழுது தினமும் இந்த மந்திரத்தை ஒரு முறையோ அன்றி பலமுறையோ காலை, மாலை வேளைகளில் கூறி, இந்த உலகத்தைப் பீடித்துள்ள நோய் பிணி நீங்கி அனைவரும் நலம்பெற்று வாழ வேண்டும் என்ற வேண்டுதலை முன்வைத்து, இறைவனை வழிபடவேண்டும். நிச்சயம் பலன் கிடைக்கும்.

மகா ம்ருத்தும்ஜெய மந்திரம்

ஓம் த்ரியம்பகம் யஜாமஹே
ஸுகந்திம் புஷ்டி வர்த்தனம்
உர்வாருஹமிவ பந்தனாத்
ம்ருத்யோர் முஷ்ய மாம்ருதாத்'
ஓம் நமச்சிவாய ஓம்நமச்சிவாய ஓம்நமச்சிவாய.

இம்மந்திரத்தை தினமும் ஓதுவதோடுநாமும் நலமடைந்து உலகமக்களும் நலமடைய வேண்டும் என்று பிரார்த்தனை செய்து கொள்ளுங்கள். இவ்வாறான பிரார்த்தனைகளால் பலனும் நலமும் பெற்றவர்கள் பலர்.

ஆலயத்தின் அமைப்பை நோக்கின், தென்கிழக்கு நோக்கிய மூலமூர்த்தமாக ஸ்ரீபத்திரகாளிஅம்பாள் எழுந்தருளிக் காணப்படுகின்றாள். அம்பாளின் சந்நிதானத்தின் பின்புறமாகக் காணப்பட்ட புராதன அரசமரத்தைச்சுற்றி வட்டமான பீடம் கட்டப்பட்டது. அரசமரத்தினை உள்ளடக்கிச் சதுரமாக இவ்வாலயம் அமைந்தது. அன்னையின் வலமாகப் பிள்ளையாரும், இடமாக முருகனும் எழுந்தருளியுள்ளனர். பிள்ளையாருக்கு முன்பாகச் சுதையால் ஆன மூலபத்திரகாளியும், சந்நிதானமும் காணப்படுகின்றது. தலவிருட்சத்தை வலம்வரத் தொடங்கினால் முறையே புராதன அம்பாள், அனந்தசயனத்திருமால், நாகதம்பிரான், சிவபெருமான், நவக்கிரகம், வைரவர் ஆகியோர் காட்சி தருவர்.

தற்பொழுது ஆலயப்பணிகளில் தம்மை ஈடுபடுத்தி, உழைத்துவரும் திருவாளர் திரு.பொ. வல்லிபுரம் அவர்கள் தலைமைப் பொறுப்பேற்ற பின்னர் ஆலயத்திருப்பணி வேலைகள் பல நிறைவேற்றப்பட்டது. மாமல்லபுரத்திலே உருவான அன்னை பத்திரகாளி, முருகன், நாகதம்பிரான் ஆகிய தெய்வச்சிலைகள் தமிழகத்திலிருந்து கொண்டுவரப்பட்டது. பலரின் ஒத்துழைப்பால் அருளும் அழகும் நிறைந்த மயூரபதி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய வேலைகள் முழுமையாக நிறைவேற்றப்பட்டு 1987 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25 ஆந் திகதி ஆலய கும்பாபிஷேகப் பெருவிழா மிக விமரிசையாகப் பிரம்மஸ்ரீ சாமி. விஸ்வநாதக்குருக்கள் தலைமையில் சிறப்புற நிறைவேறியது.

அரும்பணிச்செல்வர் திரு.பொ. வல்லிபுரம் அவர்கள் தலைமையில் பல்வேறுபணிகளும் நிறைவேற்றப்பட்டுள்ளது. 06.07.1988 இல் அம்பாளின் உற்சவமூர்த்திக்குக் கும்பாபிஷேகம் நடைபெற்றது. அக்காலத்தில் ஸ்ரீ சிவபாலயோகி சுவாமிகளும் ஆலயத்துக்கு விஜயம் செய்து ஆசீர்வதித்தார்கள். 1988 ஆம் ஆண்டிலிருந்து செவ்வாய்தோறும் இராகுகாலப்பூசையும், 1989 இல் இருந்து பௌர்ணமிதோறும் 108 பெண்கள் செய்யும் திருவிளக்குப்பூசையும், இன்றுவரை தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. 1988 ஆம் ஆண்டு இவ்வாலயத்திலே நடைபெற்ற ஆடிப்பூரத் திருவிழாவை யொட்டி, இருபது நாட்கள் இலட்சார்ச்சனை நடைபெற்றது. இறுதிநாளான ஆடிப்பூரத்தினத்தன்று, மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்திலிருந்து அடியார்கள் பாற்குடங்களைச் சுமந்து வந்து, அன்னைக்குப் பாலாபி'கம் செய்யும் முறையும் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் நூற்றுக்கணக்கானோர் மட்டுமே பங்குபற்றிய இப்பாற்குடப்பவனியில் தற்காலத்தில் ஆயிரக்கணக்கானோர் பங்குபற்றி அன்னைக்குப் பாலாபி'கம் செய்து, அன்னையின் அருளைப் பெற்று வருகின்றனர். ஆடிப்பூரத்திற்கு அடுத்தநாள் அன்னை பவனி வந்து தன்னை வந்தடைய முடியாத அடியார்களுக்கு அருள்வழங்குவாள்.

வளரும்...





TORONTO ASTROLOGER & PSYCHIC
Pandit: ARJUN
9 TIMES MORE POWERFUL THAN OTHER ASTROLOGERS



VEDIC SOLUTIONS AVAILABLE FOR:
* Health * Education * Family * Job
* Marriage * Divorce * Love * Childless
* Business * Promotion * Husband-Wife Couples
* Lucky Numbers * Court Etc

REMOVES BLACK MAGIC & EVIL SPIRITS & GIVES 100% PROTECTION

No Person in the World is Without Problems. Meet the Pandit once and see your Future Changing for GOLDEN & BRIGHT FUTURE

100% Guarantee
He can perform Devi upasana Lakshmi Pooja Shanthi Pooja (Prayers) and all so protection from enemies and jealousy

PRIVATE & CONFIDENTIAL

கேரளாவிலிருந்து வருகை தந்துள்ள பிரபல ஜோதிட வல்லுனர் பண்டித் Pandit: Arjun சாஸ்திரிகள் பல இடங்களுக்குச் சென்று தற்போது கனடா வந்துள்ளார். இவர் கைரேகை, ஜாதகம், முக நாடி ஆகியவை கொண்டு மிகத்துல்லியமாக நடந்தவை, நடக்கவிருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார். இவற்றையெல்லாம் அறிந்து பரிகாரம் செய்து கொள்ள ஒருமுறை இவரைச் சந்தியுங்கள்..!

கண்ணூறு, நாவூறுக்கு வெள்ளிக்கிழமைகளில் இலவசமாக நூல் கட்டப்படும்

- கைரேகை
- நாம சட்சத்திரம்
- கல்வி, உத்தியோகம்
- தொழில், வியாபாரம்
- இலட்சுமி வசீகரம்
- வதிவிடப் பிரச்சனைகள்
- வெளிநாட்டுப் பயணங்கள்
- பெண்பிள்ளைகள் - பெற்றார் பிரச்சனைகள்
- நீதிமன்ற வழக்குகள்
- திருமண யோகம்
- குழந்தைப் பாக்கியம்
- சர்ப்ப தோஷம்
- கர்ப்பதோஷம்
- கஸ்ட - நஸ்டங்கள்
- வாகனப் பொருத்தம்
- ஒன்று கூடுதல்

அகோரா சாமயாகளடம சென்று மந்துரங்கள கற்று கொண்ட ஓம பரகாஷ

2607 Eglinton Ave East, Scarborough ON, M1K 2S2
UPSTAIRS ERA SUPERMARKET , (BRIMLEY & EGLINTON)

Call: 416-722-9498

# மரண அறிவித்தல்

பிறப்பு: 20-05-1952 இறப்பு: 17-08-2020



## திருமதி. சரோஜினிதேவி கோவிந்தன்

(வேலணை)

யாழ். வேலணை வங்களாவடியைப் பிறப்பிடமாகவும், கனடாவை வதிவிடமாகவும் கொண்ட சரோஜினிதேவி கோவிந்தன் அவர்கள் 17-08-2020 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் குலசேகரம்பிள்ளை இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் மூத்த மகளும், இராமநாதன் சேதுப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும்,
கோவிந்தன் (எழுத்தாளர் பசுந்தீவு) அவர்களின் அன்புத் துணைவியும்,
இராசகுமார் (பொறியியலாளர்), துர்ஷிகா (விரிவுரையாளர், ஆசிரியை), சஞ்ஜயா (முகாமையாளர்) ஆகியோரின் அன்புத் தாயாரும்,
வசந்தகுமார் (பொறியியலாளர்) அவர்களின் சிற்றன்னையும்,
பாரதி, கங்கா, இலட்சுமன் ஆகியோரின் அன்பு அப்பம்மாவும், பிரியா அவர்களின் அன்பு அம்மம்மாவும், சித்தார்த், அபிஷேக், றொசான் ஆகியோரின் அன்புப் பாட்டியும்,
கார்த்திகா, கோபிகா, கிறிஸ் ஆகியோரின் அன்பு மாமியாரும்,
அருந்தவம், ஆனந்ததவம், உதயகேசரன், மாயகேசரன், வைகுந்தராஜன், தேவகேசரன், சுசிலாதேவி, சாரதாதேவி, சிலோஜனா ஆகியோரின் அன்பு அக்காவும்,
ஈஸ்வரமூர்த்தி, யோகநாதன், இராஜகாரியர், மீனலோஜினி, தயாவதி, யமுனா, மாதவி, சாருமதி, வசந்தி ஆகியோரின் அன்பு மைத்துனியும்,
காலஞ்சென்றவர்களான நல்லம்மா, வேலாசிப்பிள்ளை மற்றும் சோமசுந்தரம், இலட்சுமி, கந்தையா (கனடா), டில்லிராஜபாலன் ஆகியோரின் அன்பு மச்சாளும் ஆவார்.

*அன்னாரின் இறுதிக் கிரியையகள் மற்றும் தகனக்கிரியைகள் ஆகியன 20-08-2020 வியாழக்கிழமையன்று, கனடாவின் மார்க்கம் நகரில் நடைபெற்றன.*

**இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

**தகவல்: குடும்பத்தினர்**
**தொடர்புகளுக்கு:**
**கோவிந்தன் இராமநாதன் - கணவர்** (Mobile): (416) 431-6587
**இராஜ்குமார் கோவிந்தன் - மகன்** (Mobile): (416) 897-7870

# 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

காத்திருந்து வரவேற்கும் கண்கள் இன்று மூடியதுவோ
கைபட சமைத்துத்தந்த கைகள் இன்று ஓய்ந்ததுவோ
கருசணையாய் விசாரிக்கும் உள்ளமது இன்று உறங்கியதோ
கைப்பிடித்த நாள்முதலாய் சந்தோஷத்தை தந்தவளே
கருவறையில் சுமந்த பிள்ளைகள் இருவரிலும்
கண்களிலே கண்ணீரைக் கண்டதில்லை – இன்று
எல்லோரின் கண்களும் குளமாகி நிற்கின்றன
எமைவிட்டு மறைந்து ஒருமாதம் கடந்தது
இன்று போல் இருக்கிறது நமக்கு
கரை தெரியா மாலுமிகள் போல்
கடலினிலே தத்தளித்து நிற்கின்றோம்
கருணையுள்ள கடவுளிடம்
உங்கள் ஆத்மா சாந்திபெற
அனுதினமும் வேண்டுகிறோம்!

**ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!**

அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு நேரில் வந்தவர்களுக்கும் தொலைபேசி, முகநூல் மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும், இறுதிக்கிரியையின் போது கலந்து கொண்டவர்களுக்கும், மலர்மாலைகள், மலர்வளையங்கள் சாத்தி அஞ்சலி தெரிவித்தவர்களுக்கும், தேவாரம் ஒதியவர்களுக்கும், குருமார்களுக்கும், பலவழிகளிலும் உதவி புரிந்த உற்றார் உறவினர் நண்பர்கள் யாவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு எமது குடும்பத்தலைவியின் 31ம் நாள் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்துகொண்ட அனைவர்களுக்கும் நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

**416-745-9264 647-859-9264**

மண்ணில் 24 - 11 - 1954

விண்ணில் 21 - 07 - 2020



உடுவிலைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கிப்பிளிங் ரொரன்றோ கனடாவில் வாழ்ந்து அமரத்துவமடைந்த அமரத்துவமாது

## அழகராஜா நளினி

# அன்பின் தொனி - 574

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**ஜெபத்தின் வல்லமை.**

**என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்?**

என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்? எனக்கு உதவி செய்யாமலும், நான் கதறிச் சொல்லும் வார்த்தைகளைக் கேளாமலும் ஏன் தூரமாயிருக்கிறீர்? என் தேவனே, நான் பகலிலே கூப்பிடுகிறேன், உத்தரவுகொடீர், இரவிலே கூப்பிடுகிறேன், எனக்கு அமைதலில்லை. இஸ்ரவேலின் துதிகளுக்குள் வாசமாயிருக்கிற தேவரீரே பரிசுத்தர். எங்கள் பிதாக்கள் உம்மிடத்தில் நம்பிக்கைவைத்தார்கள், நம்பின அவர்களை நீர் விடுவித்தீர். உம்மை நோக்கிக் கூப்பிட்டுத் தப்பினார்கள், உம்மை நம்பி வெட்கப்பட்டுப்போகா திருந்தார்கள். நானோ ஒரு புழு, மனுஷனல்ல, மனுஷ ரால் நிந்திக்கப்பட்டும், ஜனங்களால் அவமதிக்கப்பட்டும் இருக்கிறேன். என்னைப் பார்க்கிறவர்களெல்லாரும் என்னைப் பரியாசம்பண்ணி, உதட்டைப் பிதுக்கி, தலையைத் துலுக்கி: கர்த்தர்மேல் நம்பிக்கையாயிருந்தானே, அவர் இவனை விடுவிக்கட்டும், இவன்மேல் பிரியமாயிருக்கிறாரே, இப்பொழுது இவனை மீட்டுவிடட்டும் என்கிறார்கள். நீரே என்னைக் கர்ப்பத்திலிருந்து எடுத்தவர், என் தாயின் முலைப்பாலை நான் உண்கையில் என்னை உம்முடையபேரில் நம்பிக்கை யாயிருக்கப்பண்ணினீர். கர்ப்பத்திலிருந்து வெளிப்பட்டபோதே உமது சார்பில் விழுந்தேன், நான் என் தாயின் வயிற் றில் இருந்தது முதல் நீர் என் தேவனாயிருக்கிறீர். என்னை விட்டுத் தூரமாகாதேயும், ஆபத்து கிட்டியிருக்கிறது, சகாயரும் இல்லை. அநேகம் காளைகள் என்னைச் சூழ்ந்திருக்கிறது, பாசான் தேசத்துப் பலத்த எருதுகள் என்னை வளைந்து கொண்டது. பீறி கெர்ச்சிக்கிற சிங்கத்தைப்போல், என்மேல் தங்கள் வாயைத் திறக்கிறார்கள். தண்ணீரைப் போல் ஊற்றுண்டேன், என் எலும்புகளெல்லாம் கட்டுவிட்டது, என் இருதயம் மெழுகுபோலாகி, என் குடல்களின் நடுவே உருகிற்று. என் பெலன் ஓட்டைப்போல் காய்ந்தது, என் நாவு மேல்வாயோடே ஒட்டிக்கொண்டது, என்னை மரணத்தூளிலே போடுகிறீர்.
**- சங்கீதம் 22: 1-15**

**கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களே, அவரைத் துதியுங்கள்.**

நாய்கள் என்னைச் சூழ்ந்திருக்கிறது, பொல்லாதவர்களின் கூட்டம் என்னை வளைந்துகொண்டது, என் கைகளையும் என் கால்களையும் உருவக் குத்தினார்கள். என் எலும்புகளையெல்லாம் நான் எண்ணலாம், அவர்கள் என்னை நோக் கிப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். என் வஸ்திரங்களைத் தங்களுக்குள்ளே பங்கிட்டு, என் உடையின்பேரில் சீட்டுப் போடுகிறார்கள். ஆனாலும் கர்த்தாவே, நீர் எனக்குத் தூரமாகாதேயும், என் பெலனே, எனக்குச் சகாயம்பண்ணத் தீவிரித்துக்கொள்ளும். என் ஆத்துமாவைப் பட்டயத்திற்கும், எனக்கு அருமையானதை நாய்களின் துஷ்டத்தனத் திற்கும் தப்புவியும். என்னைச் சிங்கத்தின் வாயிலிருந்து இரட்சியும், நான் காண்டாமிருகத்தின் கொம்புகளில் இருக் கும் போது எனக்குச் செவிகொடுத்தருளினீர். உம்முடைய நாமத்தை என் சகோதரருக்கு அறிவித்து, சபைநடுவில் உம்மைத் துதிப்பேன். கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களே, அவரைத் துதியுங்கள், யாக்கோபின் சந்ததியாரே, நீங்கள் எல்லாரும் அவரைக் கனம்பண்ணுங்கள், இஸ்ரவேலின் வம்சத்தாரே, நீங்கள் எல்லாரும் அவர்பேரில் பயபக்தியாயிருங்கள். உபத்திரவப்பட்டவனுடைய உபத்திரவத்தை அவர் அற்பமாயெண்ணாமலும் அருவருக்காமலும், தம்முடைய முகத்தை அவனுக்கு மறைக்காமலுமிருந்து, தம்மைநோக்கி அவன் கூப்பிடுகையில் அவனைக் கேட்டருளினார். மகா சபையிலே நான் உம்மைத் துதிப்பேன், அவருக்குப் பயப்படுகிறவர்களுக்கு முன்பாக என் பொருத்தனைகளைச் செலுத்துவேன். சாந்தகுணமுள்ளவர்கள் புசித்துத் திருப்தியடைவார்கள், கர்த்தரைத் தேடுகிறவர்கள் அவரைத் துதிப் பார்கள், உங்கள் இருதயம் என்றென்றைக்கும் வாழும். பூமியின் எல்லைகளெல்லாம் நினைவுகூர்ந்து கர்த்தரிடத்தில் திரும்பும், ஜாதிகளுடைய சந்ததிகளெல்லாம் உமது சமுகத்தில் தொழுதுகொள்ளும். ராஜ்யம் கர்த்தருடையது, அவர் ஜாதிகளை ஆளுகிறவர். பூமியின் செல்வவான்கள் யாவரும் புசித்துப் பணிந்து கொள்வார்கள், புழுதியில் இறங்குகிற வர்கள் யாவரும் அவருக்கு முன்பாக வணங்குவார்கள். ஒருவனும் தன் ஆத்துமா அழியாதபடி அதைக் காக்கக்கூடாதே. ஒரு சந்ததி அவரைச் சேவிக்கும், தலைமுறை தலைமுறையாக அது ஆண்டவருடைய சந்ததி என்னப்படும். அவர்கள் வந்து அவரே இவைகளைச் செய்தார் என்று பிறக்கப் போகிற ஜனங்களுக்கு அவருடைய நீதியை அறிவிப்பார்கள். **- சங்கீதம் 22: 1-31**

**என் தேவனே, உம்மை நம்பியிருக்கிறேன்,**

கர்த்தாவே, உம்மிடத்தில் என் ஆத்துமாவை உயர்த்துகிறேன். என் தேவனே, உம்மை நம்பியிருக்கிறேன், நான் வெட் கப்பட்டுப்போகாதபடி செய்யும், என் சத்துருக்கள் என்னை மேற்கொண்டு மகிழவிடாதேயும். உம்மை நோக்கிக் காத்திருக்கிற ஒருவரும் வெட்கப்பட்டுப் போகாதபடி செய்யும், முகாந்தரமில்லாமல் துரோகம்பண்ணுகிறவர்களே வெட்கப்பட்டுப் போவார்களாக கர்த்தாவே, உம்முடைய வழிகளை எனக்குத் தெரிவியும், உம்முடைய பாதைகளை எனக்குப் போதித் தருளும். உம்முடைய சத்தியத்திலே என்னை நடத்தி, என்னைப் போதித்தருளும், நீரே என் இரட்சிப்பின் தேவன், உம்மை நோக்கி நாள்முழுதும் காத்திருக்கிறேன். கர்த்தாவே, உம்முடைய இரக்கங்களையும் உம்முடைய காருணியங் களையும் நினைத்தருளும், அவைகள் அநாதிகாலமுதல் இருக்கிறதே. என் இளவயதின் பாவங்களையும் என் மீறுதல் ளையும் நினையாதிரும் கர்த்தாவே, உம்முடைய தயவினிமித்தம் என்னை உமது கிருபையின்படியே நினைத்தருளும் கர்த்தர் நல்லவரும் உத்தமருமாயிருக்கிறார், ஆகையால் பாவிகளுக்கு வழியைத் தெரிவிக்கிறார். சாந்தகுணமுள்ளவர்களை நியாயத்திலே நடத்தி, சாந்தகுணமுள்ளவர்களுக்குத் தமது வழியைப் போதிக்கிறார். கர்த்தருடைய உடன்படிக் கையையும் அவருடைய சாட்சிகளையும் கைக்கொள்ளுகிறவர்களுக்கு, அவருடைய பாதைகளெல்லாம் கிருபையும் சத்திய முமானவைகள். கர்த்தாவே, என் அக்கிரமம் பெரிது, உம்முடைய நாமத்தினிமித்தம் அதை மன்னித்தருளும். கர்த்தருக்குப் பயப்படுகிற மனுஷன் எவனோ அவனுக்குத் தாம் தெரிந்துகொள்ளும் வழியைப் போதிப்பார். அவன் ஆத்துமா நன்மையில் தங்கும், அவன் சந்ததி பூமியைச் சுதந்தரித்துக்கொள்ளும். கர்த்தருடைய இரகசியம் அவருக்குப் பயந்த வர்களிடத்தில் இருக்கிறது, அவர்களுக்குத் தம்முடைய உடன்படிக்கையைத் தெரியப்படுத்துவார். என் கண்கள் எப்போ தும் கர்த்தரை நோக்கிக் கொண்டிருக்கிறது, அவரே என் கால்களை வலைக்கு நீங்கலாக்கிவிடுவார். என்மேல் நோக்க மாகி, எனக்கு இரங்கும், நான் தனித்தவனும் சிறுமைப்படுகிறவனுமாயிருக்கிறேன்.
**- சங்கீதம் 25: 1-16**

*தொடரும்...*








BUDGET
50
ALL ITEMS $50 & LESS
இங்கு அனைத்து ஆடை வகைகளும்
$50ம் அதற்குக் குறைவான
விலையிலும்
பெற்றுக்கொள்ளலாம்
தரம் மிக்க ஆடைகளை
மிக மலிவான விலையில்
பெற்றுக்கொள்ள
எம்மிடம் வாருங்கள்!
Shop n Save
GTA Square Mall, Unit #102
5215 Finch Ave. E, Scarborough, ON M1S 0C2
905.670.9094 416.297.1670
INSIDE GTA SQUARE MALL
OFFER VALID TILL SEP. 30, 2020


SAI RAM
FASHION INC
சாயி ராம் பஷன்
GRAND SALE
Spend $50.00 & get a FREE GIFT
Sarees · Salwar · Ladies Skirts
Blouse · Childrenware
Fancy Items & Much More...
GTA Square Mall, Unit #106
Tel: 647-874-1501


Tides
Dry Cleaner & Custom Tailor
Wedding Season
Saree, Veshti, Saalvai, Suits,
Winter Jacket and more...
OPEN 7 DAYS
SPECIAL 3 DRESS PANTS FOR $10
SPECIAL OFFER PANTS HEMMING $5.99
COME VISIT US INSIDE GTA MALL UNIT 108 - MAIN LEVEL
416-291-9777 • www.tidesdrycleaning.com


NATHAN TRADERS
நாதன் ரேடர்ஸ்
Ever Silver, Aluminum Goods
Veshti/Salvai Selections,
Religious Items, Gift Items
Spend $40.00 & get a FREE GIFT
UNIT 156 647-345-8850

Life Insurance
Don't think twice
Life Insurance Group Benefits
Critical Illness RRSP / RESP
Disability
Investments
iNFORCE LIFe Financial Services Inc.
RESP
Registered Education Saving Plans
40% - 20%
Goverment Grant
Plus additional
15-10% on us.
Start Saving Early
Ajanthan (Ajay) Thavayogarajah
Insurance and Investments
Call Ajay: 416.704.8074

TRAFFIC TICKETS!
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
Peter Joseph
Legal Representative / Paralegal
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

வீடு வாங்க விற்க
Vijay Muthumani
Sales Representative
HomeLife Today Realty Ltd., Brokerage*
*Independently Owned and Operated.
Off: 416-298-3200
Dir 647-963-0705

23rd Years in Publishing

UTHAYAN உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்

Tel : 416-752-1524
Fax: 416-752-6703

NEW CLASS STARTING
On12th October 2019
Income Tax
Bookkeeping
(QuickBooks)
Sree
416.438.3350
Seyon Financial Services

ONLY LOCATION IN GTA
OCEAN ACCOUNTING TAX CONSULTANTS
Accounting Services for Personal and Small Business
1646 VICTORIA PARK AVE., SUITE 1
PARK PLAZA (BETWEEN LAWRENCE & EGLINTON)
TORONTO, ON. M1R 1P7
TEL: 416-285-6900
FAX: 416-285-4877
Email: OATC@oceantax.ca Web: www.oceantax.ca
Personal & Corporate Income Tax Returns
Complete Accounting Services

மொன்றியல் நகரில்
உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பலசரக்கு மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

உதயம் 1272 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday August 21, 2020



# கனடிய அரசாங்கம் கோவிட்–19 நோய்பரவல் காரணமாக மக்களுக்கு வழங்கி வந்த நிதி உதவிகளையும் சலுகைகளையும் தொடரவுள்ளது

கோவிட்19 நோய் பரவல் காரணமாக கனடிய மக்கள் திடீரென எதிர்கொண்ட பல்வேறு பிரச்சனைகளை சமாளிக்கவென கனடிய மத்திய அரசாங்கத்தால் வழங்கப்பெற்ற நிதி உதவிதகள் மற்றும் சலுகைகள், மானியங்கள் ஆகியவற்றை தொடர்ந்தும் வழங்குவது என கனடிய அரசு அறிவித்துள்ளது. கனடாவின் மத்திய வருமான வரித்துறையின் சிரேஸ்ட அதிகாரிகள் சிலர் கடந்த சில நாட்களாக விடுத்த அறிவிப்புக்களில் பல விபரங்கள் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

குறிப்பாக, இந்த நெருக்கடியான கால கட்டத்தில் தொழில் செய்திருந்தும் வேலை இழந்தோருக்காக வழங்கப் பெறும் காப்புறுதித் தொகையைப் பெற தகுதி இழந்தவர்களின் நலன் கருதி, அவர்களுக்கும் வாராந்தம் 400 டாலர்கள் வழங்கப்பெறும் என்றும், எவ்வாறாயினும் முக்கியமாக தகுதிபெற்றவர்களுக்கே மேற்படி உதவித் தொகை வழங்கப்படும் என்றும் கனடிய வருமானவரித்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விபரங்களை எமது இணையத்தளங்களான www. uthayannews.ca மற்றும் www.nanban.ca ஆகியவற்றில் முழுமையாகப் பார்க்கலாம்.

# இலங்கையில் தமிழின அழிப்பு தொடர்பான அறிவூட்டல் வாரத்தை ஒன்றாரியோ பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தும் சட்டத்தை நான் முழுமையாக ஆதரிப்பேன்

## தமிழ் ஊடகப் பிரதிநிதிகள் சந்திப்பில் ஒன்றாரியோ முதல்வர் டக் போர்ட் உறுதிமொழி அளித்தார்

கடந்த செவ்வாய்க்கிழமை 18ம் திகதியன்று கனடாவில் இயங்கிவரும் தமிழ் ஊடக நிறுவனங்களின் ஆசிரியர்கள் மற்றும் செய்தியாளர்கள் ஆகியோர், கனடாவின் ஒன்ராறியோ மாகாண சபை உறுப்பினர் விஜய் தணிகாசலம் அவர்களின் ஏற்பாட்டில், ஒன்ராறியோவின் முதல்வர் டக் ஃபோர்ட் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் அரிஸ் பபிகியன் ஆகியோருடன் ஊடக சந்திப்பொனறுக்கு அழைக்கப்பட்டிருந்தார்கள்.

மேற்படி நிகழ்வின் போது, முதல்வர் அவர்கள் சில முக்கியமான உள்ளூர் மற்றும் மக்கள் பிரச்சினைகள் தொடர்பில் கருத்து வெளியிட்டிருந்தார்.

மேற்படி ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போது கேள்வி நேரத்தில் கனடா உதயன் பத்திரிகையின் ஆசிரியர் லோகேந்திரலிங்கம் முக்கியமான கேள்வியொன்ற முதல்வரிடம் முன்வைத்தார்.

மாகாண சபை உறுப்பினர் விஜய் தணிகாசலம் அவர்கள் சபையில் சபையின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்த " இலங்கை தமிழின அழிப்பு தொடர்பான அறிவூட்டல் வாரத்தை ஒன்றாரியோ பாடசாலைகளில் நடைமுறைப்படுத்துவது தொடர்பான சட்டமூலம் 104 தொடர்பானது.

இந்த சட்டமூலம் மாகாண சபையில் அங்கீகாரத்தைப் பெறுவதற்கு மாகாண முதல்வர் என்றவகையில் எவ்வாறு ஆதரவு வழங்குவீர்கள் என்று அமைந்த அந்தக் கேள்விக்கு பதிலளித்த முதல்வர் டக் போர்ட் அவர்கள் தான் அதற்கு முழுமையான ஆதரவை வழங்கவுள்ளதாகவும், ஒரு நாட்டில் குறிப்பிட்ட இனத்திற்கு எதிராக நடத்தப்பெற்ற இனப்படுகொலை தொடர்பான விபரங்களையும் அந்தக் கொடுமைகளையும், அதே இன மாணவ மாணவிகள் மற்றும் வேற்று இனக் மாணவ மாணவிகள் ஆகியோர் அறிந்து கொள்வது மிக அவசியம் என்றும் தெரிவித்தார்.

### தமிழர் இன அழிப்பு தொடர்பான சட்ட வரைபு - 104

தமிழ் இன அழிப்பு அறிவூட்டல் வாரம் தொடர்பான சட்டவரைவு - 104இன் தற்போதைய நிலை குறித்து தமிழ் ஊடகங்கள் கேள்வி எழுப்பியபோது, முதல்வர் அவர்கள் மேற்படி சட்டவரைபை முழுமையாக ஆதரிப்பதாகவும், அதனை நிறைவேற்றுவதாகவும் உறுதி அளித்தார். அத்துடன், முதல்வர் அவர்கள் தமிழ் சமூகம் எதிர்கொண்டுவரும் பேரதிர்ச்சியையும் பாதிப்பையும் தான் புரிந்துகொண்டுள்ளதாகக் கூறினார். ஒன்ராறியோ மானிலத்தில் வாழும் அனைத்து மக்களுடனும் தமிழ் மக்கள் தமக்கு நடைபெற்ற அனுபவங்களையும் கதைகளையும் பகிர்ந்துகொள்வதன் முக்கியத்துவத்தையும் அவர் அங்கு குறிப்பிட்டார். இம்மாகாணத்திற்கும் நாட்டிற்கும் தமிழ் சமூகம் செய்த அர்ப்பணிப்புகள் பற்றியும் அவர் அங்கு எடுத்துரைத்தார்.

### போக்குவரத்து

ஒரு தசாப்த காலத்துக்கும் மேலாக ஸ்காபரோ பகுதி போக்குவரத்துத் துறைக்கான கட்டமைப்புகளில் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக முதல்வர் சுட்டிக்காட்டினார். மேலும் அவர் குறிப்பிடும்போது, 650,000 இற்கும் மேற்பட்ட ஸ்கார்பாரோ வாழ் மக்கள் போதிக போக்குவரத்து வசதிகள் இன்றி உள்ளனர் என்றும் தெரிவித்தார். எனவேதான் எமது அரசாங்கம் நிலக்கீழ் தொடருந்து சேவையை நீட்டித்து, ஸ்காபரோவில் புதிய மூன்று தொடருந்து தரிப்பிடங்களை நிறுவுவதற்கான திட்டத்தை வழங்கி அங்கு வசிக்கும் மக்களுக்கு இலகுவான போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவுள்ளது.

### ஸ்காபரோவுக்கான சுகாதார திட்டம்

ஸ்கார்பாரோ பொது மருத்துவமனையில் நோயாளிகள் காத்திருக்கவேண்டிய நேரம் மிக நீண்டதாக உள்ளது பற்றி முதல்வரிடம் கேட்கப்பட்ட கேள்விக்கு, அதனை இல்லாமல் ஆக்குவதற்கு எமது அரசாங்கம் ஸ்காபரோ சுகாதாரக் கட்டமைப்பிலும், மானிலத்தில் உள்ள பிற மருத்துவமனைகளிலும் மில்லியன் கணக்கான டொலர்களை முதலீடு செய்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். மேலும், ஸ்காபரோ வாழ் மக்கள் தங்களுக்குத் தேவையான சுகாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்வதற்குத் தகுதியுடையவர்கள் எனவும் அவர் தெரிவித்தார். அத்துடன், எதிர்காலத்தில் ஸ்காபாரோவில் ஒரு புதிய மருத்துவமனையை உருவாக்க முடியும் என தான் நம்புவதாகவும் கூறினார்.

### பாடசாலைகள் மீண்டும் ஆரம்பிப்பதற்கான திட்டம்

பாடசாலைகள் மீண்டும் செப்டெம்பரில் ஆரம்பிப்பதற்கு வேண்டிய எமது அரசாங்கத்தின் திட்டம் கல்வி அமைச்சர் ஸ்டீபன் லெஸ்சே தலைமையில் நடைபெறுவதாகத் தெரிவித்தார். தற்போதைய காலச் சூழ்நிலையையும் அவர் சுட்டிக்காட்டினார். இத்தகைய சூழலில், குழந்தைகளின் உடல்நலம் மற்றும் பாதுகாப்பே முக்கியமானதென்றும், அதனை உறுதி செய்வதற்கு தனது அரசும் சுகாதார பணிப்பகமும் அயராது உழைத்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

### கொவிட்-19 மூன்று கட்ட திட்டங்கள்

சுகாதார தலைமை மருத்துவ அதிகாரி வைத்தியர் வில்லியம்ஸ் அவர்களால் கொடுக்கப்பட்ட கடுமையான சுகாதார மற்றும் பாதுகாப்பு நெறிமுறைகளைப் பின்பற்றிய அனைத்து ஒன்ராறியோ வாழ் மக்களுக்கும் முதல்வர் தான் நன்றிக்கடன் பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார். நோய்த் தொற்றின் இரண்டாம் அலை ஒன்ராறியோ மானிலத்தைத் தாக்கினால், தனக்கு வழங்கப்படும் சுகாதார அறிவுரைகளின்படி மீண்டும் ஒன்ராறியோ மானிலத்தை மூடுவதற்குத் தான் தயங்க மாட்டேன் எனவும் தெரிவித்த முதல்வர், தனது குழு தொடர்ந்தும் நிலை-மையைக் கண்காணித்து வருவதாகவும் தெரிவித்தார். பள்ளிகளை மூடிய முதல் மானிலம் ஒன்ராறியோ என்றும், தேவையானதைச் செய்ய தான் பின்னிற்க மாட்டேன் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேற்படி சந்திப்பின் இறுதியில் மாகாண சபை உறுப்பினர் விஜய் தணிகாசலம் அவர்கள் முதல்வருக்கு "மக்களின் சாம்பியன்" என்னும் பட்டத்தை வழங்கினார். மற்றைய மாகாண சபை உறுப்பினர் அரிஸ் பாபிகியன் அவர்களும் முதல்வரின் சேவைகளைப் பாராட்டி உரையாற்றினார்.

# ஒன்றாரியோ முதல்வர் டக் போர்ட் ஸ்காபுறோவில் 'மக்களின் சாம்பியன்' என்னும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்




கடந்த செவ்வாய்க்கிழமை, 18ம் திகதியன்று கனடாவில் இயங்கிவரும் தமிழ் ஊடக நிறுவனங்களின் ஆசிரியர்கள் மற்றும் செய்தியாளர்கள் ஆகியோர், கனடாவி-ன் ஒன்ராறியோ மாகாண சபை உறுப்பினர் விஜய் தணிகாசலம் அவர்களின் ஏற்பாட்டில், ஒன்ராறியோவின் முதல்வர் டக் ஃபோர்ட் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் அரிஸ் பபிகி-யன் ஆகியோருடன் ஊடக சந்திப்பொனறுக்கு அழைக்கப்பட்டிருந்தார்கள். மேற்படி நிகழ்வின் போது, முதல்வர் அவர்கள் சில முக்கியமான உள்ளூர் மற்றும் மக்கள் பிரச்சினைகள் தொடர்பில் கருத்து வெளியிட்டிருந்தார். தமிழ் மக்களையும் தமிழ் 'ஊடகவியலாளர்களையும் நன்கு பாராட்டினார்.

மேற்படி சந்திப்பின் இறுதியில் மாகாண சபை உறுப்பினர் விஜய் தணிகாசலம் அவர்கள் முதல்வருக்கு "மக்களின் சாம்பியன்" என்னும் பட்டத்தை வழங்கினார். மாகாண சபை உறுப்பினர் அரிஸ் பாபிகி-யன் அவர்களும் முதல்வரின் சேவைகளைப் பாராட்டி உரையாற்றினார். இங்கே காணப்படும் படம் வைபவத்தில் எடுக்கப்பட்டதாகும்.

